விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 10 செவ்வாய்க்கிழமை (26.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 250

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# மீறி விட்டார் மோடி

## கூட்டமைப்புடனான சந்திப்பில் மோடி மீது இலங்கை சீற்றம்



(புதுடில்லி)

இலங்கை அரசாங்கத்திற்கு அளித்த வாக்குறுதியை இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி மீறியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இலங்கையின் வெளிவிவகார அமைச்சு இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முதலில் சந்திப்பு நடத்தியமை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என வெளிவிவகார அமைச்சின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

20ஆம் பக்கம் பார்க்க....

## வங்கிக் கணக்கை தேட அனுமதி



(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் வங்கி கணக்குகளில் தேவையான தகவல்களை தேடிக்கொள்வதற்கு கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலப்பிட்டிய நேற்று திங்கட்கிழமை அனுமதியளித்தார்.

இந்த கணினி நிபுணர் குழு, தேசிய அபிவிருத்தி வங்கிக்கு செப்டெம்பர் 3,4 மற்றும் 5 ஆம் திகதிகளில் பிற்பகல் 2.30 மணிமுதல் 6 மணிவரை அங்கு செல்லும். இதற்கு அரச சட்டத்தரணிகள் எதிர்ப்பு

20ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை-இந்திய மீனவர் 29 இல் டில்லியில் பேச்சு

(கொழும்பு)

இலங்கை மீனவர்கள் இடையே நடந்த இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை தோல்வியடைந்த நிலையில், வரும் ஆகஸ்ட் 29-ம் திகதி டில்லியில் இருநாட்டு அதிகாரிகள் நிலையில் மீனவர் தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெற உள்ளது.

கடந்த மே 12-ம் திகதி கொழும்பில் நடந்த பேச்சுவார்த்தையில், தமிழக விசைப் படகு மீனவர்கள் தடை செய்யப்பட்ட வாருதல் மீன்பிடி மற்றும் இரட்டைமடி மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி, இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிப்பதை முற்றிலுமாக கைவிட வேண்டும் என இலங்கை மனவப் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

ஆனால் இந்த மீன்பிடி முறையை மாற்றிக்கொள்ள 3 ஆண்டு அவகாசம் வேண்டும் எனவும், இலங்கை

20ஆம் பக்கம் பார்க்க....

## கஞ்சாவுடன் 6 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

சாட்டிக் கடற்கரையில் வைத்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட கொழும்பைச் சேர்ந்த அறுவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து ஊர்காவற்றுறை நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலா

19ஆம் பக்கம் பார்க்க....

## முதலமைச்சரைச் சந்திப்போம் தமிழ்க் கூட்டமைப்பு உறுதி

(கொழும்பு)

புதுடில்லி சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குழுவில் மூவர் நேற்று முன்தினம் தமிழக அரசியல் தலைவர்களை சந்திக்கும் நோக்கில் சென்னைக்குச் சென்றனர். ஏனைய மூவரும் இலங்கைக்கு திரும்பிய நிலையில் நேற்று காலை மீண்டும் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. சென்னைக்குச் சென்றுள்ளார்.

இலங்கை வந்த சமயம் தமது தமிழகப் பயணம் குறித்து அவர் கருத்து தெரிவித்தார்.

இதன்போது, விசா நடைமுறை காரணமாக தான் இலங்கை வந்து மீண்டும் தமிழகம் சென்றேன் என்றும், தமிழரசுக்கட்சி மாநாடு நெருங்கும் காரணத்தால் மாவை

20ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை பிரச்சினையை தீர்க்க இந்திய அரசு உதவவேண்டும்

### தமிழர் பேரவை கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் போர் முடிந்து ஐந்து வருடங்கள் ஆகிவிட்ட நிலையிலும் தமிழ்மக்களுக்கு எந்த விமோசனமும் கிட்டவில்லை.

எனவே இலங்கைப் பிரச்சினைத தீர்வுக்கு இந்தியா உதவவேண்டும் என்று பிரித்தானியத்தமிழர் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து நேற்று திங்கட்கிழமை சென்னை, சேப்பாக்கத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கண.நிர்மலன் தெரிவித்தவை வருமாறு.

இலங்கையில் போர் முடிந்து 5 வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால் அங்கு இராணுவப் பிரசன்னம்

19ஆம் பக்கம் பார்க்க....

## சொந்த ஊரில் சுதந்திரதினம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சொந்த ஊரில் 2015-ம் வருட தேசிய சுதந்திர தின நிகழ்வுகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆண்டு பெப்ரவரி மாதம் 4-ம் திகதி அம்பாந்தோட்டை, வீரகெட்டிய என்னும் இடத்தில் சுதந்திர தின நிகழ்வுகள் நடத்தப்பட உள்ளன.

வீரகெட்டியவில் சுதந்திர தின நிகழ்வுகளை நடத்த அமைச்சரவை

20ஆம் பக்கம் பார்க்க....

## ஆணைக்குழுவின் அமர்வு அடுத்த மாதம் கிளி.யில்

(கொழும்பு)

காணாமல் போனவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அடுத்த கட்ட அமர்வுகள் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

அடுத்த மாதமளவில் இந்த அமர்வுகள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 18-ம திகதி முதல் 22-ம் திகதி வரையில் இந்த அமர்வுகள் நடைபெறவுள்ளது.

இந்த ஆண்டில் இரண்டாவது தடவையாக கிளிநொச்சியில் காணாமல் போனவர்கள் தொடர்பில ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்த உள்ளதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் எச்.டபிள்யூ.குணதாச தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 18-ம் திகதி முதல் 21-ம் திகதி வரையிலும் விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புதிதாக பதிவு செய்யப்பட்ட முறைபாடுகள் தொடர்பில் விசாரணை நடத்தி சாட்சியங்கள் திரட்டப்பட உளளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஏ-ர)

## மீண்டும் ஜனாதிபதியாக வர மகிந்தவுக்கு தகுதியில்லை

### முன்னாள் நீதியரசர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் கூடிய விரைவில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படலாம் என்ற ஊகங்கள் அரசாங்கத்துக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஊடகங்களில் வெளியாகி வருகின்றன.

அந்தத் தேர்தலில் தனது மூன்றாவது தவணைக்காக மகிந்த ராஜபக்ஷ போட்டியிடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு மகிந்த ராஜபக்ஷவுக்கு சட்டப்படி தகுதியில்லை என்று நாட்டின் முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என். சில்வா சர்ச்சை ஒன்றைக் கிளப்பியுள்ளார்.

ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்க

20ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஐஸ் வைக்கும் இந்தியப் பிரதமர் மோடி!

## விமர்சகர் ஜயதிலக்க தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை இலங்கைக்கு ஐஸ் வாளி சவால் என அரசியல் விமர்சகரும் முன்னாள் ராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தலையில் குளிர்ந்த நீரை ஊற்றும் ஐஸ் வாளி சவால் என்றே நான் காண்கிறேன். இந்தியப் பிரதமர் மோடி இலங்கை அரசாங்கத தில் ஐஸ் வாளியில் தண்ணீர் நிரப்பியுள்ளார்.

அரசாங்கத்திடம் மண்டியிட்டு நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்குள் வரும் வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவதில்லை என அரசாங்கம் எண்ணியது.

கூட்டமைப்பினர் யார் என்ற மமதையில் அரசாங்கம் இருந்தது. தென் ஆபிரிக்காவின துணை ஜனாதிபதி சிறில் ராமபோஸா, யாழ்ப்பாணம் சென்று முதலமைச்சர் விக்னேஸ்வரனை சந்தித்தார்.

இதன் பின்னர், இந்திய வெளிவிவகார அமைச்சர் முதல் முறையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை சந்தித்தார். இதன் பின்னர் இந்தியப் பிரதமர் சந்தித்தார்.

இந்த பேச்சுவார்த்தையை பார்க்கும் போது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை போல் அவர்களுக்கு கிடைத்த வரவேற்பு காணப்பட்டது.

இதன்போது இலங்கையில் வீங்கிய தலை மீது பிரதமர் மோடி ஐஸ் தண்ணீரை ஊற்றினார்.

நரேந்திர மோடி பதவிப்பிரமாணம் செய்யும் நிகழ்வுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அழைக்க வேண்டாம் என தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறினார்.

எனினும் மோடி, மகிந்த ராஜபக்ஷவை அழைத்தார். அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணிக்கப்பட்டே இருந்ததுடன் இலங்கைக்கு சிறந்த சந்தர்ப்பமும் இருந்தது.

நிகழ்வில் பங்கேற்ற ஜனாதிபதிக்கு இந்திய பிரதமர் மோடி 13வது திருத்தச் சட்டம் குறித்து நினைவுபடுத்தினார்.

ஆனால், இலங்கை அரசாங்கம் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில், 13வது திருத்தச் சட்டம் பற்றி பேசியது குறித்து குறிப்பிடவில்லை. அதில் இருந்து சிறு விரசம் ஏற்பட்டதாக தெரிகிறது.

இவ்வாறான சூழ்நிலையில், இந்திய அமைச்சரவை அமைச்சர் பதவியை வகிக்காத சுப்ரமணியன் சுவாமியை வரவழைத்து பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்ற செய்து, அவர் கூறிய விடயங்களை இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு என நம்ப ஆரம்பித்தது.

இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு பிரதமர் நரேந்திர மோடியின் நிலைப்பாடோ சுப்ரமணியன் சுவாமியின் நிலைப்பாடோ அல்ல.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்திய பிரதமரை மாத்திரம் சந்திக்கவில்லை. இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரையும் சந்தித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தை சேர்ந்த எவரையும் இந்தியாவின் புதிய பாதுகாப்பு ஆலோசகர் இதுவரை சந்திக்கவில்லை. அயல நாட்டுடன் மேற்கொள்ளும் தொடர்புகளில் குறித்த முகாமைத்துவத்தின் குறைபாட்டையே இது காட்டுகிறது எனவும் தயான் ஜயதிலக்க குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## குளவி கொட்டி 12 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி, புறாப்பொறுக்கியில் குளவிக்கொட்டுக்கு இலக்காகிய நிலையில் 12 பேர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புளியமரத்தில் இருந்த குளவிக்கூடொன்றுக்கு சிறுவர்கள் கல்லெறிந்தமையால், கலைந்த குளவிகள் வீதியில் சென்றவர்களைத் கொட்டியுள்ளது. (எ-11)

## டெசோ அமைப்பின் அவசரக் கூட்டம்

(சென்னை)

திமுக தலைவர் கருணாநிதி தலைமையில் தமிழ் ஈழம் ஆதரவாளர் அமைப்பின் (டெசோ) அவசரக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற உள்ளது.

இது குறித்து திமுக தலைமை வெளியிட்டுள்ள அறிக்கையில், டெசோ அமைப்பின் அவசரக் கூட்டத்தில் அமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (எ-11)

## குழு மோதலுக்கு தயாரானவர் வாளுடன் பொலிஸாரால் கைது

### அல்வாயில் சம்பவம்


அல்வாய் வடக்கு மகாத்மா வீதியில் வாளுடன் நின்றிருந்த 32 வயதுடைய சந்தேகநபர் ஒருவரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்ததாக பருத்தித்துறைப் பொலிஸார் நேற்றுத் திங்கட்கிழமை தெரிவித்தனர்.

மேற்படி பகுதியில் குழு மோதலுக்குச் சிலர் தயாராகி வருவதாக ஞாயிற்றுக்கிழமை இரவு பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைக்கப்பெற்றது.

இதனையடுத்து, அவ்விடத்திற்கு பருத்தித்துறைப் பொலிஸார் சென்றுள்ளதுடன் பொலிஸாரைக் கண்டதும் மோதலுக்குத் தயாராக நின்றவர்கள் தப்பித்து ஓடிய போதிலும் வாள்களுடன் நின்ற ஒருவரை பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனவும், அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் தொடர்புடையவர் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன், குழு மோதலில் ஈடுபடுவதற்கு 8 பேர் தயாராகவிருந்ததாகத் தெரியவந்ததையடுத்து, தப்பியோடியவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் சந்தேகநபரைப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் திங்கட்கிழமை ஆஜர்ப்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் கூறினர். (எ-11)



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோயில் 25 ஆம் நாள் திருவிழாவில் நேற்று திங்கட்கிழமை மாலை கொடியிறக்கம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து முருகன்-வள்ளி தெய்வானையுடன் வெளி வீதியுலா வருவதை படத்தில் காணலாம்.

## அனந்திக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(முல்லைத்தீவு)

வட மாகாணசபையின் பெண் உறுப்பினர அனந்தி சசிதரனிற்கு எதிராக மீண்டும் முல்லைத்தீவில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

அனந்தி சசிதரன் உள்ளிட்ட தரப்புகளால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுக்கள் தொடர்பான விசாரணைகள் நேற்று இடமபெறவிருந்தது. இதற்கு அவர்கள் செல்வார்கள் என்ற எதிர்பார்ப்பில் இவ்வார்ப்பாட்டம் நடத்தப்பட்டிருந்தது.

தொண்டர் இராணுவ படைப்பிரிவை சேர்ந்தவர்கள் மற்றும் தொண்டர் ஆசிரியர்கள் ஆகியோருடன் இராணுவப் புலனாய்வு பிரிவை சேர்ந்தவர்களும் இணைந்து அவ்வார்ப்பாட்டத்தை நடத்தியிருந்தனர்.

நேற்றைய விசாரணை திகதி குறித்து ஒத்தி வைக்கப்படுமென்ற தகவல் அடிப்படை அனந்தியோ ஏனைய காணாமல் போனவர்களது உறவுகளோ முல்லைத்தீவிற்கு சென்றிருக்கவில்லை.

எனினும் அவர்கள் நீதிமன்றினுள் இருப்பதாக கருதியே இவ்வார்ப்பாட்டத்தை நடத்தியதாக தெரியவருகின்றது.

கடந்த தவணையின் போதும் இதே போன்றே ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டிருந்த நிலையில் பொலிஸ் பாதுகாப்புடனேயே அனந்தி மற்றும் காணாமல் போனோரது குடும்பங்கள் முல்லைத்தீவிலிருந்து வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை

## வெண்டி மரச் சர்ச்சைக்கு நடவடிக்கை எடுக்க இணக்கம்

(கொழும்பு)

புலமைப் பரிசில் பரீட்சை; வெண்டி மரச் சர்ச்சைக்கு நடவடிக்கை எடுக்க இணக்கம் காணப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தமிழ் மொழிமூல வினாத்தாளில் காணப்பட்ட குளறுபடிக்கு உரிய தீர்வு வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வினாத்தாள பகுதி 02இல் 36 ஆம் வினாவில் வெண்டிச் செடிக்கு பதிலாக வெண்டி மரம் என குறிப்பிடப்பட்டமையே இந்த குளறுபடிக்கான காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருத்தமற்ற சொல் இவ்வாறு கேள்வியில் உள்ளடக்கப்பட்டமையானது தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய தமிழ் மொழி மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம்தெரிவிக்கையில்,

தமிழ் மொழிமூல வினாத்தாளில் ஏற்பட்டிருந்த குளறுபடிகள் தொடர்பில் ஆராய்ந்து மாணவர்களுக்கு சிறந்த முறையில் தீர்வொன்றை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உதவிப் பரீட்சைகள் ஆணையாளர் எஸ்.பிரணவதாசன் தெரிவித்தார். (எ-11)

## பல்கலை மாணவர்கள் விளக்கமறியலில்

(கண்டி)

பேராதனை பல்கலைக்கழகத்தின் மூன்று மாணவர்களை எதிர்வரும் நான்காம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி பிரதான நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

பேராதனை பொலிஸார் தாக்கல் செய்த அறிக்கையை அடுத்தே அவர் இந்த உத்தரவை பிறப்பித்தார்.


குறித்த மாணவர்கள் எதிர்ப்பு போராட்டத்தை நடத்த பேராதனை பகுதியில் சட்ட விரோதமான கட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளதாக பொலிஸார் தாக்கல் செய்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவபீடத்தை நிறுவ வலியுறுத்தி மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதே சம்பவத்தை அடிப்படையாக கொண்டு மேலும் இரண்டு மாணவர்களுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பல்லைக்கழகத்தின் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை போராட்டம் தொடரும் எனவும் பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-11)

## மரண அறிவித்தல்



### நாகன் செல்லக்குட்டி (இராசு)

ஏழாலை கிழக்கு அண்ணமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கு மயிலங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் - செல்லக்குட்டி (இராசு) நேற்று (25.08.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகன் - பொன்னி தம்பதிகளின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான இளையவிகுட்டி தம்பதிகளின் மருமகனும், கனகத்தின் பாசமிகு கணவரும், கஸ்தூரி, மதி, ஜெயகௌரி, கஸ்தூரன், கவிதா ஆகியோரின் பாசமிகு தகப்பனும், காலஞ்சென்ற திருவானந்தவிஜயன் மற்றும் ஜீவரஞ்சன், அருட்குமரன், சுவர்ணா ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2014) செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு.

(சி-8287)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரதம் எமது வரம்



## அமரர். திரு. சி. வரதராஜன்

(பிரபல பொருளியல் ஆசிரியர்,
முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்)

ஈழத்துச் சாணக்கியன் நீ
யாழ்ப்பாணத்து அடம் சிமித் நீ

பெரும் கேள்வி நீ, அதன் நிரம்பல் நீ - தமிழில்
பொருளியல் வேள்வி செய்த துரோணர் நீ

விண் கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் - எம்
கண் கண்ட தெய்வம் நீ

துள்ளல் நடையோடும் எள்ளல் உரையோடும்
துல்லிய விளக்கம் தரும் மெல்லிய உருவன் நீ

ஆசிரியத்துவத்தின் தனித்துவம் நீ - தமிழுலகில்
ஆடி ஓய்ந்த அறிவாயுதம் நீ

ஓலைக் கொட்டில்களில் உயர்ந்த உன் சத்தங்களில்
அமைந்ததுவே எங்கள் வாழ்வு - ஆதலால்

உன் பேரவாவே எம் பேரவாவும்
பொருளியல் சூரியனே போய் வா

(7492)

அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது
ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிக்கின்றோம்.

பாடை சுமக்கும் பாக்கியம் கிட்டாத தூர தேசத்து மாணாக்கர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இறைமையினை மதித்து இந்தியா செயற்படுவது அவசியமாகும்

## ஜனாதிபதி மஹிந்த நியமித்த ஆலோசனைக்குழுவில் அங்கத்துவம் பெற்றுள்ள உறுப்பினர் கௌசல்

(கொழும்பு)

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அககட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட ஆறுபேர் கொண்ட நாடாளுமன்றக் குழுவினர் சந்தித்துப் பேச்சு நடத்தியமை குறித்து இலங்கையில் சிங்கள கடும்போக்கு அமைப்புக்களும் அரசியல்வாதிகளும் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துவரும் நிலையில் மேற்படி சந்திப்பு ஈழத் தமிழருக்கு விடிவினைத்தேடித் தருமெனவும் பல தரப்பினர்களினாலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றது.**

இந்நிலையில் இந்தியா, இலங்கையின் இறை மையை மதித்து செயற்பட வேண்டுமென காணமற் போனார் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமிக்கப்பட்டுள்ள குழுவில் இடம்பெற்றுள்ள இந்திய மனிதவுரிமை பணியாளர் அவ்டேஸ் கௌசல்தனது விசுவாசத்தை வெளிப்படுத்தும் வகையில் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்திய பிரிவினைவாதிகளுடன் இலங்கை பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டால் இந்தியாவின் உணர்வுகளும் நிலையும் எவ்வாறிருக்கும், தமிழர்கள் தாங்கள் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்பதை மறந்து தம்மை இலங்கையர்களாக கருதி அந்த நாட்டின் அரசமைப்பு, சட்டங்களிற்கு கட்டுப்பட வேண்டும், அவர்கள் வட மாகாணத்திற்கு பொலிஸ் அதிகாரத்தை கோர கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

**அச்சுறுத்தல்**

இந்தியாவிலுள்ள பிரிவினைவாதிகளுடன் இலங்கை அரசாங்கத் தரப்பினர் பேச்சுவார்த்தைகளை நடத்தினால் இந்தியாவின் நிலைமை என்னவாகும் என்பதை உணர்தல் அவசியம்.

**வலியுறுத்தல்**

இந்தியா இலங்கையின் இறைமையினையும் இலங்கை இந்தியாவின் இறைமையினையும் பரஸ்பரம் மதித்து செயற்படுதல் அவசியம்.

**விசுவாசம்**


இலங்கையில், 13 ஆவது திருத்தத்தின் கீழ் ஏற்பட்டுள்ள முன் னேற்றங்களைப் பாராட்ட வேண் டும். எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் செயற்பாட்டில் ஈடுபடக் கூடாது. இலங்கை மீது அழுத்தத்தை பிரயோகிக்கக்கூடாது இந்தியா.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா, இலங்கையுடன் பேச்சுக்களை மேற்கொள்ளலாம், ஆலோசனை வழங்கலாம். ஆனால் அந்த நாடு எப்படி நடந்துகொள்ளவேண்டும் என உத்தரவிட முடியாது. இரு நாடுகளும் பரஸ்பரம் ஏனையவர்களின் இறைமையை மதித்து செயற்பட வேண்டும்

எமது நிலைப்பாட்டை வலியுறுத்த வேண்டும், 13 ஆவது திருத்தத்தின் கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை பாராட்டவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

காணாமற் போனவாகள் மற்றும் யுத்தக் குற்றச்செயல்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்கும் நிபுணர்குழுவில் இவர் அங்கம் வகிக்கின்றார்.



இலங்கையில் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளக் கூடாது எனவும், பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் வகையில் செயற்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடுகளின் மீது இந்தியா அழுத்தங்களை பிரயோகிக்கக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் இந்தியாவிலிருந்து சென்றோம் என்பதனை மறந்து இலங்கையர்கள் எனக் கருதிக்கொள்ள வேண்டுமெனவும், இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ)

## பாலியல் தொழிலை சட்டமாக்க சர்வதேச அமைப்புக்கள் அழுத்தம்

(கொழும்பு)

பாலியல் தொழிலை சட்டமாக்குமாறு வெளிநாடுகளின் நிதியில் இயங்கும் சர்வதேச அமைப்புகள் அழுத்தங்களை கொடுத்து வருவதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

குருணாகல் மாவட்டம் தம்பதெனி, நாராம்பல பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெண்கள் பற்றி பேசும் போது சிறிய பிரச்சினை ஒன்று உள்ளது. வெளிநாடுகளில் இருந்து நிதி கிடைக்கும் சர்வதேச தொண்டர் அமைப்புகளில் பணியாற்றும் சிறிய தரப்பு பெண்கள் உள்ளனர்.

இவர்கள் பெண்களின் உரிமைகளை பற்றி பேசுகின்றனர். ஆனால் பாலியல் தொழிலை சட்டமாக்குமாறு கோருகின்றனர்.

அதேவேளை உங்கள் நாட்டில் பெண்கள விவகாரங்களை கையாள பெண்கள் இல்லையா என வெளிநாட்டுத் தூதரங்கள் கேட்கின்றன.

இலங்கையில் பாலியல் தொழிலை சட்டமாக்குமாறு அவர்களும் என்னிடம் கோரிக்கை விடுத்தனர் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## ஒபெக் உடன் ஹக்கீம் பேச்சு அரசாங்கம் அதிருப்தியில்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், எரிபொருள் ஏற்றுமதியில் ஈடுபடும் மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளின் அமைப்பான ஒபெக்கின் பிரதிநிதிகளை சந்தித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகளுக்கும் ஒபெக் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு அரசாங்கத்தை அதிருப்தி அடையச் செய்துள்ளது.

ஒபெக் நாடுகளுடன் இலங்கை அரசாங்கம் தனியான உறவுகளை பேணி வருகின்றது.

இவ்வாறான ஓர் நிலையில் ஒபெக்கின் பிரதிநிதிகளுடன், முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் சந்திப்பு நடத்தியமைக்கு அரசாங்கம் எதிரப்பை வெளியிட்டுள்ளது.

குறித்த அமைப்புடன் முஸ்லிம் காங்கிரஸ இரகசிய பேச்சுவார்த்தை நடத்தியமை குறித்து அரசாங்கம் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

இதற்கு முன்னரும் மத்திய கிழக்கு நாடுகளின் அமைப்பு ஒன்றுடன் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் இரகசிய சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தனர்.

ஒபெக் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற சந்திப்பில் முஸ்லிம் காங்கிரசுடன் நெருங்கிச் செயற்படும் வர்த்தகர்கள், புத்திஜீவிகள் உள்ளிட்டவர்களும் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

### இராணுவத்தில் முஸ்லிம் யுவதி

இலங்கை இராணுவத்தின் வரலாற்றில் முதல் முறையாக முஸ்லிம் யுவதி ஒருவர் இணைந்து கொண்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் 35 தமிழ் யுவதிகளுடன் மொஹமட் வசீர் ரிசானா என்ற இந்த யுவதியும் இராணுவத்தில் இணைந்து கொண்டுள்ளார்.

திருகோணமலை 22 ஆவது இராணுவ தலைமையகத்தில் இவர்கள் அனைவரும் அண்மையில் பயிற்சிகளை முடித்து வெளியேறினர்.

இவர்களின் அணி வகுப்பு மரியாதையை பிரிகேடியர் ஆர். சண்முகநாதன் ஏற்றுக் கொண்டார். (எ-11)

## சாட்சிகளை பாதுகாக்கும் சட்டமூலம் விரைவில்!

### முல்லை மாவட்ட நீதிபதி தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

சாட்சிகளை பாதுகாக்கும் சட்டமூலம் மிக விரைவில் அமுலுக்கு வரும் என முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மா. கணேசராஜா தெரிவித்தார்.

உலக கரிசனை நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட "சிறகுகள்" நூல் வெளியிட்டு விழாவில முல்லை அரச அதிபருடன் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா கௌரவ அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

சாட்சிகளை பாதுகாக்கும் சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மிகவிரைவில பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதன்மூலம் சிறுவர்களின் உரிமைகள் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் மொகான் பீரிஸ் மற்றும் அமைச்சர் ரவூப் ஹக்கிம் ஆகியோரின் பெரு முயற்சியினால் இச்சட்டமூலம் விரைவில் அமுலுக்கு வரவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்:

மேலும் சிறுவர் தொடர்பான பிரத்தியோக நீதிமன்றங்கள் வடமேல் மாகாணத்தில் நிறுவப்பட்டுள்ளதாகவும் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ள இந்த சட்ட மூலம் நீதிமன்றங்களில் சாட்சிகளை பாதுகாப்பதற்கு குறிப்பாக சிறுவர்களை பாதுகாப்பதற்கு இச்சட்டமூலம் மிகவும் உதவும் என குறிப்பிட்டார்.

மேலும் இலத்திரனியல் நடைமுறைமூலம தூரப்பிரதேசங்களிலிருந்து சாட்சிகளை வழங்கும் நடைமுறையும் பிரதம நீதியரசர் மொகான் பீரிஸின் கடும் முயற்சியினால் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டதுடன் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரின் முயற்சியால் 23 மில்லியன்



ரூபாய் செலவில் சிறுவர் பாதுகாப்பு இல்லம் ஒன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை முல்லை மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாகும் எனவும் குறிப்பிட்டார். (எ-11)

### ஆட்கொணர்வு வழக்கு மீண்டும் விசாரணைக்கு

(முல்லைத்தீவு)

விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் எழிலன் உட்பட காணாமல் போனோர் தொடர்பிலான ஆட்கொணர்வு மனுக்கள் நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவினாலேயே விசாரிக்கப்பட வேண்டுமென நீதிச்சேவை ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட பணிப்புரைக்கமைவாக நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர்களின் அரச சட்டதரணிகள் ஆஜராகாத நிலையில் மீண்டும் மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ரட்ணவேலின் கோரிக்கைக்கு அமைவாக வழக்கு செப்ரெம்பர் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எபோலா தாக்கிய நபருக்கு தனிமையில் சிகிச்சையளிப்பு

கடந்த பெப்ரவரி மாதம் கினியாவில் தென்படத் தொடங்கிய எபோலா விசத் தொற்றுநோயின் தாக்கத்தினால் அண்டை நாடுகளான லைபீரியா, சியரா லியோன் உட்பட்ட நாடுகளில் இதுவரை ஆயிரத்து 427 பேர் பலியாகி உள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்த நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வர பல மாதங்கள் ஆகலாம் என்று உலக சுகாதாரக நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் இங்கிலாந்திலிருந்து சென்று சியரா லியோனில் தொண்டு புரிந்து வரும் தன்னார்வல ஆண் மருத்துவ உதவியாளர் ஒருவருக்கு எபோலா நோய்த்தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவரைத் தனிமைப்படுத்தி தேவையான சிகிச்சைகளை அளிக்கும் விதமாக இங்கிலாந்தின் இராணுவ விமானம் ஒன்றில் திரும்ப அழைத்துவரப்பட்ட இவர் லண்டனுக்கு வெளியேயுள்ள இராணுவ இலவச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட உள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

இங்கிலாந்தில் செயல்பட்டுவரும் எபோலா தனிமை சிறப்புப்பிரிவு இது ஒன்றே ஆகும் என்பதுவும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. தீவிரமான நோய்த்தாக்கம் அவரிடம் காணப்படாதபோதும் மருத்துவ வசதிக்காக அவர் திரும்ப அழைக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. (இ)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
19
02
1939



இறப்பு
06
09
2013

அமரர் கணபதிப்பிள்ளை நடராசா
(ஓய்வுபெற்ற இ:போ:ச. பரிசோதகர்)
திதி-பிரதமை

எம்மை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தி
இதயத்தில் சுமந்து நல்வழி நடத்திய அப்பாவே
இங்கு உங்களை கூற வார்த்தைகள் போதாதப்பா
நீங்கள் எங்களுக்கு நண்பனப்பா
எம் கண்ணில் வரும் துளி நீரைக் கூட
தாங்க முடியாத இதயம் கொண்ட நீங்கள்
எம்மை விட்டு பிரியாமல் பிரிந்ததேனப்பா
வேண்டுமப்பா மறுபிறவியிலும் அப்பாவாக.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இல-503, 7 ஆம் யூனிற்
இராமநாதபுரம். (7451) குடும்பத்தினர்.


# ஆந்திரா, தெலுங்கானா சிறப்பு வரிச் சலுகையை மறுப்பரிசீலனை செய்க

## பிரதருக்கு ஜெயலலிதா கடிதம்

ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களுக்கு அறிவித்துள்ள சிறப்பு வரிச் சலுகையை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி முதல்வர் ஜெயலலிதா பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அவர் எழுதியுள்ள கடிதத்தில் ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களுக்கு அறிவித்துள்ள சிறப்பு வரிச் சலுகையை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். இந்த வரிச் சலுகை மாநிலங்களுக்கு இடையே சமநிலையின்மையை ஏற்படுத்தும். அண்டை மாநிலங்களுக்குச் சிறப்பு சலுகை வழங்கப்பட்டுவிட்டதே என்ற காழ்ப்புணர்ச்சியில் இதை கூறவில்லை. ஆனால், வரிச் சட்டப்பிரிவு 94(1)-ன் படி, இவ்விரு மாநிலங்களிலும் முதலீடு செய்வதற்கு சிறப்பு வரிச் சலுகைகள் வழங்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளதே கவலை அளிக்கிறது.

இந்த சிறப்பு வரிச் சலுகையால் மாநிலங்களுக்கு இடையில் சமச்சீரில்லாத போட்டி ஏற்படும். ஒரு மாநிலத்தை இரண்டாகப் பிரிக்கும் போது, சில பொருளாதார சூழ்நிலைகளைக் காரணம் கூறி, சிறப்பு வரிச் சலுகை அறிவிக்கப்படுகிறது. அந்த வகையில், இந்த சிறப்பு வரிச் சலுகைகள் குறிப்பிட்ட காலத்துக்குள் திரும்பப் பெறப்பட வேண்டும்.

ஆனால், அந்த வரிச்சலுகை காலத்தை நீட்டிப்பது, தமிழகத்தில் இருந்து சில தொழில் நிறுவனங்கள் வெளியேறி ஆந்திரா, தெலுங்கானாவில் தொழில் தொடங்கும் வாய்ப்பை ஏற்படுத்தும். காங்கிரஸ் ஆட்சியில் அரசியல் ஆதாயத்துக்காகவும், மக்களவைத் தேர்தலை கருத்தில் கொண்டும் ஆந்திர, தெலுங்கானா மாநிலங்களுக்கு சிறப்பு வரிச் சலுகை செய்யப்பட்டது. ஆந்திரா, தெலுங்கானா வரிச் சலுகையால், அண்டை மாநிலமான தமிழகத்தின் பொருளாதாரம் பாதிக்கப்படக் கூடாது. எனவே, இந்த விடயத்தில் பிரதமர் நரேந்திர மோடி தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு முதல்வர் கூறியுள்ளார். (இ)

# யாழ்ப்பாண இளைஞர்களுக்கான உப கடன் பயிற்சி வேலைத்திட்டம்

யாழ்.மாவட்டத்தின் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நிஸ்கோ பிரிவினால் 18-29 வயதிற்குட்பட்ட சுய தொழிலை மேற்கொள்ளத் தயாராகவுள்ள இளைஞர், யுவதிகளுக்கு வங்கிகளினூடாக குறைந்த வட்டியில் கடன் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

வங்கிக்கடன் பெறவிரும்பும் இளைஞர், யுவதிகள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தொழிற்பயிற்சி அதிகாரசபை, தேசிய பயிலுநர் அதிகாரசபை ஆகியவற்றில் தொழிற்பயிற்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

கடனை பெறவிரும்புவோர் தாமாக தயாரித்த சுயவிபரக்கோவை, தொழிற்பயிற்சி சான்றிதழ் பிரதி, பிறப்புச் சான்றிதழ் பிரதி, தேசிய அடையாள அட்டை பிரதியுடன் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பொது முகாமையாளர் நிஸ்கோ தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இல.28, கச்சேரி கிழக்கு ஒழுங்கு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# நாட்டிற்கு வெற்றி போசாக்கு நிறைந்த ஒரு தேசம்

மஹிந்த சிந்தனை தொலை நோக்கிற்கமைவாக ஜனாதிபதி தலைமையில் போசாக்கு சபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேசிய போசாக்குச் செயலகத்தின் அனுசரணையுடன் போசாக்கு நிறைந்த ஒரு தேசத்தினை உருவாக்குவதற்கான பன்முக செயற்பாட்டுத் திட்டம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு வடமாகாண ஆளுநர், வடமாகாண சபை முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள், பிரதம செயலாளர், மாகாண செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், மாகாண திணைக்கள தலைவர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களது பங்குபற்றுதலுடன் எதிர்வரும் 29 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் தேசிய போசாக்கு செயலகத்தின் ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் லலித் சந்திரதாஸவும் அவரது அலுவலர்களும் பங்குபற்றவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ


**தோட்டக்காணி விற்பனைக்கு**

கோப்பாய் இராச வீதியில் 3 3/4 பரப்பு தோட்டக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:-0765446750,
(7486) 0779080257



**குத்தகைக்கு காணி தேவை**

நீண்ட கால பயிர்ச்செய்கைக்கு குத்தகை அடிப்படையில் 50 பரப்பு காணி தேவை. வடமராட்சி பகுதி விரும்பத்தக்கது. தகுந்த குத்தகை வழங்கப்படும்.

தொடர்பு:- SOND
60, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(7482) TP:- 077 6549303


# இன்றைய இராசி பலன்

26.08.2014
(ஆவணி 10, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பிரதமை முன்னிரவு 10.06 மணிவரை
மகம் காலை 7.12 மணிவரை
இராகுகாலம் 3.05-4.35 மணிவரை
சுபநேரம் 10.35-12.05 மணிவரை
நல்லைக் கந்தன் பூங்காவனம் வளவன்

**மேடம்:** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**இடபம்:** சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், தன வரவில் இருந்த தடைகள் அகலும், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்:** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், சகோதர ஒத்துழைப்பால் பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும், செய்தொழில் மேன்மையுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**சிம்மம்:** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், திடீர் பயணங்கள் உருவாகும், கற்பனை மிகுதியான நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்

**கன்னி:** விரதங்களில் நம்பிக்கைகள் கூடும் நாள், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும், மனச் சஞ்சலங்கள் கூடும்.

**துலாம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பயணங்கள் செய்ய போட்ட திட்டங்கள் கைகூடும், வருமானம் அதிகரிக்கும், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த உதவிகள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், சாதுர்யமாகப் பேசி சாதனை படைப்பீர்கள், தொழில் ரீதியாக முக்கிய புள்ளிகளைச் சந்திப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, போசன சுகமுண்டு, செலவுகள் அதிகரிக்கும்.

**கும்பம்:** புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகும், கௌரவமான நாள், முயற்சிகள் கைகூடும்.

**மீனம்:** நிர்வாகத் திறமை பளிச்சிடும் நாள், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், ஆரோக்கியம் சீராகும், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# தேவைகளைப் பூர்த்தி செய்யாவிட்டால் உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெறும்

மீளக்குடியேறி 3 ஆண்டுகளானபோதும் தமது அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லைஎன விசனம் தெரிவித்ததுடன் தமது அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்வது தொடர்பில் 15 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில் தாம் உண்ணாவிரதம் இருக்கப்போவதாகவும் எழுதுமட்டுவாழ் தெற்கு (ஜே/333) மக்கள் தம்து கிராம சேவையாளரிடம் தெரிவித்துள்ளனர்.

கிராமத்தில் நடைபெறும் சட்டவிரோத செயல்கள் தொடர்பிலும் சுகாதாரம் பேணுவது தொடர்பிலும் மக்களுக்கு அறிவூட்டுவதற்காக அப்பகுதி கிராமசேவையாளரால் கூட்டப்பட்ட கூட்டத்திலேயே மக்கள் மேற்படி கோரிக்கையினை விடுத்திருந்தனர்.

கடந்த கால அசாதாரண சூழ்நிலையில் இடம்பெயர்ந்து 15 ஆண்டுகளின் பின்னர் மீளக்குடியேறி 3 ஆண்டுகளான போதும் 360 குடும்பங்களில் 68 குடும்பங்களுக்கே வீடமைப்புக்கான உதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் ஏனைய குடும்பங்கள் சுகாதாரமற்ற நிலையில் இயற்கை கடன்களைச் செலுத்தி வருவதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன் நிரந்தர வீடு, காணி என்பன இல்லாது மழைகாலம் ஆரம்பித்துள்ள நிலையில் வீடுமற்றும் மலசலகூடவசதி இல்லாதவிடத்து தாம்பெரும் அசௌகரியங்களையும் சுகாதாரப்பிரச்சினைகளையும் எதிர் நோக்கவேண்டி இருக்கும் எனவும் மக்கள் கவலையுடன் மேலும் தெரிவித்தனர். (இ-29)




# வீதியினை புனரமைத்து தரக்கோரி பொற்பதி பகுதி மக்கள் போராட்டம்






யாழ்.பருத்தித்துறை (புலோலி) பிரதேச சபைக்குட்பட்ட பொற்பதி வீதியை திருத்தித் தருமாறு அப்பிரதேச மக்கள் நேற்று பருத்தித்துறை பிரதேச சபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த வீதியானது கடந்த 8 வருடமாக திருத்தப்படாது காணப் படுகின்றது. ஆயிரத்து 340 அங்கத்தவர்களைக் கொண்ட 350 குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

மேலும் 2 பாடசாலைகள், 15 இந்து ஆலயங்கள், 2 கத்தோலிக்க தேவாலயங்கள், ஒரு ஆயுள் வேத வைத்தியசாலை என்பன காணப்படுகின்றது.

அதிகளவான பாவனையிலுள்ள மேற்படி வீதியினை திருத்தித் தருமாறு அம் மக்களால் பருத்தித்துறை பிரதேச சபைக்கு பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் இதுவரையும் பிரதேச சபையால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.


இதனையடுத்தே மக்கள் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு தமக்கு இவ் வீதியினை திருத்தித் தருமாறு கோரியிருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டமானது நேற்றைய தினம் மந்திகை சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட அதேவேளை பேரணியாக பருத்தித்துறை பிரதேச சபை வரை சென்றடைந்தது.

இதன் பின்னர் பிரதேச சபைக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு தமது கோரிக்கைகளை முன்வைத்தனர். இதன்போது பிரதேச சபையால் மக்களுக்கு தெரிவிக்கப்பட்டதில் தற்போது எம்மிடம் நிதி இல்லை அரசிடம் இருந்து நிதி வந்தால் உங்கள் கோரி க்கையினைத்தான் நாம் முன்வைப்போம் என பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

இதனையடுத்து மக்கள் தமது ஆர்ப்பாட்டத்தினை முடிவிற்கு கொண்டு வந்தனர். (இ-60)

# திருவுருவச் சிலை திறப்பு



(மானிப்பாய்)

ஈழத்து சித்தர்கள் வரிசையில் அவதரித்த கோண்டாவில் குமர கோட்டத்தைச் சேர்ந்த தவத்திரு கந்தையா சுவாமிகளின்(குடைச்சாமி) திருவுருவச்சிலை கோண்டாவில் குமரகோட்டம் ஞானவைரவர் ஆலயத்திற்கு அருகாமையில கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இத்திருவுருவச் சிலையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் திறந்து வைத்தார்.




இந்நிகழ்வில், செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுரு கன், நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன், நல்லூர் பிரதேச சபைத்தலைவர் ப.வசந்தகுமார், ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ வசந்த ராஜசர்மா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (இ-23)

# வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் இளைஞர் நுண்கடன் ஊக்குவிப்பு




யாழ்ப்பாண வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் இளைஞர் நுண்கடன் உதவித்திட்டத்தின் ஊடாக 12 பேருக்கு சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு ஊக்குவிப்புக் கடன் வழங்கப்பட்டது.

இதற்கான நிகழ்வுகள் யாழ். இராசாவின் தோட்டத்தில் உள்ள வர்த்தக தொழிற்றுறை மன்றத்தில் நடைபெற்றது.

இதன் போது சுய தொழிலை மேற் கொள்ளும் பயனாளிகள் 12 பேருக்கு 7 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த கடன வழங்குதல் தொடர்பில் ஊடக அறிக்கை ஒன்றினையும் விடுத்துள்ளனர்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வர்த்தக தொழிற்றுறை மன்றம் யாழப்பாண மாவட்டத்தினை சேர்நத குறுகிய அளவிலான சுய தொழில் முயற்சியில் ஈடுபடுகின்ற இளைஞர, யுவதிகளை ஊக்குவிக்கும் முகமாக கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இலகுகடன் திட்டமே மேற்படி இளைஞர் நுண்கடன் உதவித்திட்டமாகும்.

நிலைத்து நிற்கக்கூடியதான புதிய தொழில் முயற்சி அல்லது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட தொழில் முயற்சியினை விரிவுபடுத்துவதற்கு ஊக்கமளிக்கும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் இலகு கடன்திட்டமாகும்.

எனவே மன்றத்தினால் வழங்கப்படும் கடனை மீளவும் திருப்பி செலுத்தப்படும் இடத்து மேலும் பலருக்கு குறித்த கடனை வழங்க முடியும் என்றும் அந்த அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-23)

# நிரந்தரப் பேருந்து தரிப்பிடம் இன்னும் அமைக்கப்படவில்லை

யாழ்.நெல்லியடி மத்திய பேரு ந்து தரிப்பிடத்தில் நிரந்தர பேருந்து தரிப்பிடம் அமைக்கப்படவில்லை என பயணிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

நெல்லியடி பிரதான பேருந்து நிலையமாக குறித்த இடத்தில் பேருந்து தரிப்பிடம் அமைக்கப்படாமையினால் பயணிகள் மழை காலத்திலும் வெயில் காலத்திலும் மிகுந்த சிரமத்தினை எதிர்நோக்கி வருகின்றனர்.

பேருந்து தரிப்பிடம் அமைத்து தருமாறு கடந்த ஆறு மாத காலத்துக்கு முன்னர் பொதுமக்களால் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு கோரிக்கை விடப்பட்டிருந்தது.

ஆனால் இதுவரை காலமும் பேருந்து தரிப்பிடம் அமைப்பது தொடர்பாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையால் எந்தவொரு கவனமும் எடுக்கப்படவில்லை.

பேருந்து தரிப்பிடம் இல்லாது மரங்களுக்கு கீழும் கடைகளுக்கு வெளியேயும் பயணிகள் பேருந்து வருகைக்காக தினமும் காத்திருக்கின்றார்கள்.

எனவே மழை மற்றும் வெயில் போன்றவற்றில் இருந்து தம்மை பாதுகாக்க சாதாரண பேருந்து தரிப்பிடமாவது தமக்கு அமைத்து தருமாறு அப்பகுதியில் உள்ள மக்கள் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையிடம கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)







வடமாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சும் யாழ். இந்திய துணைத்தூதரகமும் இணைந்து நடத்திய பரதநாட்டிய நிகழ்வு சங்கிலியின் தோப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் லாவண்ஜா ஆனந்தின் பரதநாட்டிய நிகழ்வையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி நினைவுச்சின்னம் வழங்கி கலைஞர்களைக் கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஐ.நா.பொதுச்சபையில்

# இலங்கை ஜனாதிபதியை பேச அனுமதிக்க கூடாது

## பழ.நெடுமாறன் வலியுறுத்தல்

(கொழும்பு)

ஐ.நா.சபையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி நடைபெறும் கூட்டத்தில் பேசுவதற்கு இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதற்கு தமிழர் தேசிய முன்னணி அமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதிக்கு விடுத்த அழைப்பினை திரும்ப பெற வேண்டும் என ஐ.நா. அமைப்புக்கு அனைத்து தமிழ் அமைப்புக்களும் பொதுமக்களும் வலியுறுத்த வேண்டும் என அவர் தெரிவித்துள்ளதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

கோவை பத்திரிகையாளர் மன்றத்தில் தமிழர் தேசிய முன்னணி, அமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் செய்தியாளர்களுக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பேட்டியளித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்திய பிரதமர் மோடியை சந்தித்துப் பேசியுள்ளனர்.

ஈழத் தமிழர்களுக்கு எத்தகைய அரசியல் தீர்வு வேண்டும் என்பதை பொது வாக்கெடுப்பு நடத்தி அவர்களின் விருப்பத்தை அறிந்து அதற்கேற்றபடி அரசியல் தீர்வுக்கு இந்திய அரசு உதவ வேண்டும்.

ஐ.நா. மனிதவுரிமை அமைப்பின் விசாரணை தொடங்கியுள்ள நிலையில் இந்தியா மற்றும் இலங்கையில் ஐ.நா. விசாரணை மேற்கொள்ள முடியாத நிலை உருவாகி இருக்கிறது.

எனினும் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதிக்குள் இலங்கையில் நடந்த போர் குற்றங்கள் குறித்து தங்களுக்கு தெரிந்த தகவல்களையும் புகைப்படங்கள், காட்சிகள் போன்றவற்றை ஈழ தமிழர்கள் லண்டனில் உள்ள ஐ.நா. குழுவுக்கு புகாராக தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எழுதி அனுப்பலாம்.

ஐ.நா.சபையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம்25 ஆம் திகதி நடைபெறும் கூட்டத்தில் பேசுவதற்கு இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இலங்கை ஜனாதிபதி மீது போர்க் குற்றம் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் கூறியுள்ள நிலையில் அவரை ஐ.நாவில் பேச அழைத்து இருப்பது ஏற்றுக் கொள்ள முடியாது.

உடனடியாக அந்த அழைப்பை திரும்பப் பெறவேண்டும் என்று ஐ.நா. அமைப்பிடம் அனைத்து தமிழ் அமைப்புகளும் பொது மக்களும் வலியுறுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# விநாயகர் சதுர்த்தி

(கொடிகாமம்)

தென்மராட்சி வரணி குருக்கள் குடியிருப்பு அருள்மிகு பாலை நின்ற அத்தாய் மூத்த விநாயகர் ஆலய ஆவணி சதுர்த்தி எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாக ஆலய அட்சகர் சிவத்திரு க.ஜெகநாத ஐயா அறிவித்துள்ளார்.

இதன்போது நவன அபிஷேகம் ,கிரியைகள் இடம்பெற்று விநாயகப் பெருமான் விசேட அலங்காரத்துடன் வீதிவலம் அருள் பாலிக்கவுள்ளார்.

இந்த ஆவணி சதுர்த்தி நன்னாளிலே தான் முதல் வணக்கத்துக்குரிய விநாயகப் பெரும் அவதரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-272)

# முறைப்பாடுகள் 52 ஆக உயர்வு

(கொழும்பு)

ஊவா மாகாண சபைத்தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் 52 ஆக அதிகரித்துள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஊவா மாகாண சபைத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

குறிப்பாக மொனராகலை மாவடத்தில் சரத் பொன்சேகாவின் கட்சிக்காரர்களை மாத்திரமல்லாது ஐ.தே.கவின் வெல்லவாய காரியாலயம் போன்றவை அண்மைக் காலமாக தாக்கப்பட்டுள்ளன.

இதேவேளை பதுளை மாவட்டத்தில் பல பிரதேசங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 150 |
| தக்காளி | 40 | 80 | 60 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 40 | 60 |
| கோவா | 60 | 60 | 80 |
| கரட் | 80 | 100 | 120 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 60 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | 100 |
| பயற்றங்காய் | 60 | 120 | 80 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 80 | 130 | 100 |
| முருங்கைக்காய் | 20 | 30 | 60 |
| போஞ்சி | 120 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 130 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 80 | — |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 116

நிதர்ஷ் சன்




டொறின் மன்மதநாயகம்




மதீசன் கணேஷ்

மதுப்பழக்கத்திற்கு அடிமையான ஒருவனின் மனைவி, தன் கணவனின் குடிப்பழக்கத்தை நிறுத்த எண்ணினாள்.

ஒரு நடு ராத்திரிப் பொழுதில் பேய்போன்று உடைகளை அணிந்து முகமெல்லாம் பயங்கரமான தோற்றத்தை அளிப்பது போன்று தன்னை அலங்கரித்தாள். பேய் போன்று தன்னை உருவகப்படுத்திக் கொண்ட மனைவியானவள் தன் கணவன் வரும் வழியிலுள்ள ஒரு மரத்தின் பின்னே ஒளிந்திருந்தாள்.

கணவன் வரும் பொழுதில் திடீரென்று அவன் முன்னிலையில் தனது பயங்கரமான தோற்றத்துடன் பாய்ந்து நின்றாள்.

எந்தவிதப் பயமும் இன்றிக் கணவன் : யார்; நீ

மனைவி : நான் தான் பேய்!!!

கணவன் : ஓ அப்படியா நல்லது என் கூட வீட்டுக்கு வா உங்க அக்கா ஒருத்தியை தான் நான் கல்யாணம் செஞ்சிருக்கேன்.



இராமநாதன் சிந்துஜன்




சிவசிதம்பரம் மகிழ்நன் சிவநாசிம



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.

அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

902


...அல்லது கேட்டது உண்டா? ஆனால், இவை அனைத்தும் முற்றிலும் உண்மையே. அதுசரி மன்னருக்கோ, மற்றவருக்கோ நான் இதுவரை கனவில்கூட, வார்த்தையால்கூட கெடுதல் ஒன்றும் நினைத்ததோ, செய்ததோ இல்லையே பிறகு ஏன் அரசர் என்னிடம் வெறுப்புக் கொண்டிருக்கிறார்? இதற்கு என்ன காரணம் என்று புரியவில்லையே என்று பலவாறு சிந்தித்தான் தந்திலன்.

## அரண்மனை ஊழியன்!

ஒருநாள் அரண்மனைக்கு வந்த தந்திலனைக் காவலாளிகள் தடுத்து நிறுத்திவிட்டனர். அதைக் கண்டு கோரபன் உரக்கச் சிரித்தான். பிறகு, காவலாளியைப் பார்த்து எச்சரிக்கையாக இருங்கள்! அரசனின் செல்வாக்கினால் அகங்காரம்கொண்டு விருப்பம் போல் ஒருவனை இவன் அவமதிக்கிறான், மற்றவனைக் கௌரவிக்கிறான். இப்பொழுது நீங்கள் அவனைத் தடுத்துவிட்டதால் முன்பு என்னைச் செய்தது போல் உங்களையும் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளும்படி செய்வான் என்று சொன்னான். இதைக் கேட்டதும் தந்திலனுக்கு விடயம் புரிந்துவிட்டது.

அரசனின் வெறுப்புக்குக் காரணம் கோரபன் செய்த சதிதான் என்பதைத் தந்திலன் உணர்ந்தான். அரசனின் அருகிலிருந்து ஊழியன் செய்பவன், நல்ல குடும்பத்தில் பிறக்காதவனாகவோ, மூட்னாகவோ, கருணை இல்லாதவனாகவோ இருந்தாலும்கூட அவனை எல்லோரும் மதிக்கிறார்கள்.

அரசு ஊழியன் கொடூரமானவனாக இருந்தாலும் அவன் கோழையாக இருந்தாலும் தன்னைப் பிறர் அவமதிப்பதை அவன் ஒருபோதும் சகிக்க மாட்டான் என அறிவுறுத்தும் பழமொழி சரியே! என்று எண்ணிப் புலம்பினான் தந்திலன். அவமானம் அடைந்த மனத்தோடும் கலக்கத்தோடும் அவன் வீடு போய்ச்சேர்ந்தான் அவன்.



மாலையில் கோரபனை வீட்டுக்கு வரவழைத்து விலையுயர்ந்த ஆடைகள் இரண்டை அவனுக்குப் பரிசாகக் கொடுத்தான் அவன்.

நண்பனே! திருமண வரவேற்பு விழாவில் உணர்ச்சிவசப்பட்டு உன்னை நான் வெளியேற்றவில்லை. ராஜகுருவின் எதிரே, என் தகுதிக்கு மிஞ்சிய ஆசனத்தில் நீ அமர்ந்தாய்! அதைப் பார்த்துச் சகிக்காமல்தான் நான் அவ்வாறு செய்தேன் என்று இதமாக அவனிடம் தன் செயலுக்கான நியாயத்தை எடுத்துக் கூறினான் தந்திலன்.

அவனிடமிருந்து விலையுயர்ந்த ஆடைகளைப் பெற்றுக்கொண்ட கோரபனுக்குச் சொர்க்கலோகத்தை அடைந்தது போன்ற பூரிப்பு உண்டாயிற்று. அதனால் அவன் மிகுந்த மகிழ்ச்சியோடு, உத்தமனே! நீ செய்ததை நான் மறந்துவிட்டேன். மேலும் நீ அளித்த வெகுமதிக்கு விரைவிலேயே அரசரின் அருளும் பிறவும் கைமாறாக உனக்கு கிடைக்கும்............. (தொடரும்)

08.2014
26

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- 1768 - கப்டன் ஜேம்ஸ் குக் தனது கடற்பயணத்தை இங்கிலாந்திலிருந்து ஆரம்பித்தான்.
- 1795 - திருகோணமலையின் பிரெட்ரிக் கோட்டையை ஸ்டுவேர்ட் தலைமையிலான பிரித்தானியப் படையினர் ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றினர்.
- 1914 - முதலாம் உலகப் போர்: ஜேர்மனியின் குடியேற்ற நாடான டோகோலாந்து பிரெஞ்சு மற்றும் பிரித்தானியர்களினால் முற்றுகைக்குள்ளானது.
- 1914 - முதலாம் உலகப்போர்: ஜேர்மனிப்படைகள் ரஷ்யாவை டனென்பேர்க் போரில் தோற்கடித்தன.
- 1920 - ஐக்கிய அமெரிக்காவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1942 - உக்ரைனில் சோட்கிவ் என்ற இடத்தில் நாசி ஜேர்மனியர் காலை 2.30 மணிக்கு யூதர்களை அவர்களின் வீடுகளிலிருந்து வெளிய கற்றி குழந்தைகள், நோயாளிகள் உட்பட 500 பேரை கொன்று குவித்தனர்.
- 1957 - கண்டம் விட்டுக் கண்டம் பாயும் நீண்டதூர ஏவுகணையைத் தாம் சில நாட்களுக்கு முன் பரிசோதித்ததாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது.
- 1972 - 22ஆவது ஒலிம்பிக் போட்டிகள் ஜேர்மனி, மியூனிக்கில் ஆரம்பமானது.
- 1978 - முதலாவது அருளப்பர் சின்னப்பர் பாப்பரசராக பதவியேற்றார்.
- 1978 - முதலாவது ஜேர்மனிய விண்வெளி வீரர் சோயுஸ விண்கலத்தில் விண்ணுக்குப் பயணமானார்.

பிறப்புகள

- 1880 - கியோம் அப்போலினேர், பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1918)
- 1883 - திரு. வி. கலியாணசுந்தரனார். தமிழறிஞர் (இ. 1953)
- **1910 - அன்னை தெரேசா, அல்பேனிய உரோமன் கத்தோலிக்க அருட்சகோதரி, நோபல் பரிசு பெற்றவர் (இ. 1997)**
- 1927 - அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் (இ. 1989)
- 1933 - வி. தெட்சணாமூர்த்தி, ஈழத்து தவில் கலைஞர் (இ. 1978)
- 1934 - ஏ. ஜே. கனகரட்னா, ஈழத்து இலக்கியவாதி (இ. 2006)
- 1952 - பொன். சிவகுமாரன், ஈழ விடுதலைப் போராட்டத்தில் சயனைட் அருந்தி உயிர் நீத்த முதலாவது போராளி (இ. 1974)
- 1956 - மேனகா காந்தி, இந்திய அரசியல்வாதி

### அன்னை தெரேசா



அன்னை தெரேசா 1910 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 திகதி பிறந்தார். அல்பேனியா நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவரும் இந்திய குடியுரிமை பெற்ற உரோமன் கத்தோலிக்க அருட்சகோதரியும் ஆவார. இவரின் இயற்பெயர் ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியூ ஆகும். 1950 ஆம் ஆண்டு, இந்தியாவின் கொல்கத்தாவில் பிறர் அன்பின் பணியாளர் என்ற கத்தோலிக்க துறவற சபையினை நிறுவினார். நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக ஏழை எளியோர்களுக்கும், நோய் வாய்ப்பட்டோருக்கும், அநாதைகளுக்கும், இறப்பிற்கு அண்மையிலிருபபோருக்கும் தொண்டாற்றியவர் இவர். முதலில் இந்தியா முழுவதும் பின்னர் வெளிநாடுகளுக்கும் பிறர் அன்பின் பணியாளர் சபையினை நிறுவினார். 1970 ஆம் ஆண்டுக்குள் இவரைச் சிறந்த சமூக சேவகர் எனவும், ஏழைகளுக்கும் ஆதரவற்றோருக்கும் பரிந்து பேசுபவர் எனறும் உலகம் முழுவதும் புகழப்பட்டார். இவர் 1979 இல் அமைதிக்கான நோபல் பரிசினையும், 1980 இல் இந்தியாவின் சிறந்த குடிமக்கள் விருதான பாரத ரத்னா விருதினையும் பெற்றார். அன்னை தெரேசாவின் பிறர் அன்பின் பணியாளர் சபை அவரது இறப்பின்போது 123 நாடு களில் 610 தொண்டு நிறுவனங்களை இயக்கிக் கொண்டிருந்தது. இதில் எய்ட்ஸ், தொழுநோய் மற்றும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நல்வாழ்வு மையங்கள், இலவச உணவு வழங்குமிடங்கள், குழந்தைகள் மற்றும் குடும்பத்திற்கான ஆலோசனைத் திட்டங்கள், அநாதை இல்லங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவை அடங்கும். பலவேறு நபர்கள், அரசுகள் மற்றும் அமைப்புகளெனப் பலர் இவரைப புகழ்ந்து வந்தாலும், பலவிதமான விமரச னங்களையும் இவர் சந்தித்தார். இத்தகைய விமர்சனங்கள் கிறத்தபர் ஃகிச்சின்சு, மைக்கேல் பேரன்டி, அரூப் சட்டர்ஜி போன்ற நபர்களாலும் விஸ்வ ஹிந்து பரிஷத் போன்ற அமைப்புகளாலும் சாட்டப்பட்டது. இவரின் இறப்புக்குப் பின் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரால் முக்திபேறு அடைந்தவராக அறிவிககப்பட்டு கொல்கத்தாவின் அருளாளர் தெரேசா என்று பட்டம் சூட்டப்பட்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்

...தொடரில் இந்தியா தோற்றாலும் 10 ஆட்டங்களில் சச்சின் 401 ரன்கள் குவித்திருந்தான். வர இருக்கும் உலகக் கோப்பைக்கான பயிற்சியாகவே இதை சச்சின் கருதினான். ஒவ்வொரு பந்தையும் அடித்து விளையாட வேண்டும் என்ற ஆர்வக் கோளாறு காரணமாகவே சச்சின் ஆட்டம் இழந்தான் என பத்திரிகைகள் விமர்சனம் செய்திருந்தன.

என்ன இருந்தாலும் 19 வயது பையன் தானே. ஆர்வம் இருப்பதில் தவறு இல்லை. வயது ஏற ஏறப் பொறுப்பும் நிதானமும் தானாகவே வரும் என்று அவை கணித்திருந்தன.

சச்சின் அனைத்து விமர்சனங்களையும் தனது வளமான எதிர்காலத்திற்குத் தேவையான ஆலோசனைகளாகவே எடுத்துக்கொண்டான். சச்சினின் இன்றைய இமாலய உயரத்திற்கு விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளும் இந்தப் பக்குவ குணம்தான் காரணம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

ஒரு வழியாக முத்தரப்பு ஒருநாள் போட்டிகள் முடிவடைந்து பாதியில் நிறுத்தி வைக்கப்பட்ட டெஸ்ட் போட்டிகள் மீண்டும் ஆரம்பமாயின. 2-0 என்ற கணக்கில் முன்னணி வகிக்க அடிலைட்டில் நான்காவது டெஸ்ட் துவங்கியது. அசாருதீன் டாசில் வென்று ஆஸ்திரேலியாவை ஆடச் சொன்னார். ராஜு கபில் தலா மூன்று விக்கெட்டுக்களையும் சச்சின் இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்த 145 ரன்களுக்கு ஆஸ்திரேலியா ஆட்டம் இழந்தது. கபில் அரைசதம் அடித்தார். இந்தியா 225 ரன்கள் குவிக்க ஆஸ்திரேலியாவை விட 80 ரன்கள் அதிகம்.

இரண்டாவது இன்னிங்சில் ஆஸ்திரேலியாவைக் குறைந்த ரன்னில் ஆட்டம் இழக்கச் செய்தால் மிகச் சுலபமாக இந்த டெஸ்டை ஜெயித்து விடலாம் என்று சச்சின் எண்ணினார். அதற்கு ஏற்றாற்போல் டேவிட் பூன் 1 ரன் இருக்கும்போது கபில் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ. ஆனார். ஆனால் அம்பயர் அவுட் தரவில்லை. அப்போது தப்பிய டேவிட் பூன் 135 ரன்கள் எடுத்தார். கூட ஆடிய டெய்லர் 100 ரன்கள் மற்றும் பார்டர் 91 ரன்கள் எடுக்க ஆஸ்திரேலியாவின் ஸ்கோர் 451 என எகிறியது.

முதல் இன்னிங்சில் 80 வித்தியாசத்தை கழித்தால் இந்தியா வெற்றி பெற 372 ரன்கள் எடுக்க வேண்டும். ஏற்கனவே இரண்டு டெஸ்ட்களில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்ற நிலையில் இந்தப் போட்டியில் இந்தியா தோற்றாலும் ட்ரா செய்தாலும் தொடர் வெற்றி ஆஸ்திரேலியாவுக்குத்தான்.

ஆரம்ப டெஸ்டுகளில் தொடர்ந்து அதிரடியாக செஞ்சுரிகள் அடித்த அசார் இந்தப் போட்டிகளில் அதிக ரன்கள் எடுக்கவே இல்லை. சாஸ்திரி, கபில், வெங்சர்கார், ஸ்ரீகார்ந்த் என முன்னாள் கேப்டன்கள் அணியில் இருந்தனர். அசார் பழைய ஃபார்மில் ஆடினால் மட்டுமே வெற்றி நிச்சயம் என சச்சின் உட்பட அனைவரும் கருதினர். இவர்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப அசார் 106 ரன்களும், பிரபாகர் 64 ரன்களும் எடுத்தனர்.

### இவன் சொர்க்கத்தில் இருந்து வந்தவன்



சச்சின் 17 ரன்கள் மட்டுமே எடுத்து எல்லோரையும் ஏமாற்றிவிட்டான். ஆக, இந்தியா 343 ரன்களுக்கு ஆட்டம் இழக்க ஆஸ்திரேலியா 38 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று 3-0 என தொடரின் முன்னணி வகித்தது.

இந்தப் போட்டியில் அம்பயர்களின் நேர்மையும் சந்தோஷத்திற்கு இடம்கொடுத்தது. 8 இந்திய வீரர்களுக்கு எல்.பி.டபிள்யூ. அவுட் கொடுத்த அம்பயர்கள். இரண்டு ஆஸ்திரேலியர்களுக்கு மட்டுமே எல்.பி.டபிள்யூ. அவுட் கொடுத்தனர்.

குறிப்பாக டேவிட் பூன் 1 ரன்கள் இருக்கும் போதே அவருக்கு அவுட் கொடுத்திருந்தால் டெஸ்ட் முடிவு இந்தியாவுக்கு சாதகமாக மாறியிருக்கும்.

ஐந்தாவது டெஸ்ட் போட்டி பெர்த் மைதானத்தில். இந்த மைதானமும் வேகப் பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமானதுதான்.

வீசப்படும் ஒவ்வொரு பந்துமே முகத்தை முத்தமிட்டுத்தான் செல்லும். டாசில் ஜெயித்ததால் ஆஸ்திரேலியா ஆட ஆரம்பித்தது.

ஆஸ்திரேலிய வீரர்கள், பத்திரிகைகள் அனைவரும் சச்சினைப் பாராட்டித் தள்ளினர். ஆஸ்திரேலிய முன்னாள் பேட்ஸ்மென் ஓ நீல் இது வயதை மீறிய திறமை, இவனது ஸ்ட்ரோக்கு கள் அனைத்து சர்வதேச ரகத்தில் இருக்கிறது. புதியவன் போன்று தெரியவே இல்லை என்றார். ஆஸ்திரேலிய கேப்டன் பார்டரோ, 19 வயதிலும் இவன் இந்தப் போடு போட்டால் 25 வயதில் என்ன செய்வானோ என்பதை நினைத்தால் உதறலாக இருக்கிறது என்றார். ஆஸ்திரேலிய வானொலி வர்ணனையாளர் டிம் லேன் ஒருபடி மேல் சென்று இவன் சொர்க்கத்தில் இருந்து வந்தவன், இவன் எது வேண்டுமானாலும் செய்வான் என்றார்.

கே. ரமேஷ் (தொடரும்)

# உங்கள் பிறந்த எண் 09 இல் கூட்டெண் 07 இன் பலன்கள்



72

### தோற்றம்

செவ்வாயுடன் கேது சேர்ந்த ஆதிக்கப்பலன். இதில் குட்டையானவரும் உண்டு. உயரமானவரும் இருக்கிறார். வாட்டசாட்டமாக சிவப்பாக இருப்பார். துப்பரவான தோற்றம் இருக்கும். கண்கள் சிவப்பாக இருக்கும். முடி நிறைய இருக்கும். உருண்டை முகம், எடுப்பான மூக்கு, பெரிய வாய், மாறுகண் அமையும். உடலெங்கும் முடியிருக்கும். மரியாதை உண்டாக்கும் தோற்றம் கவர்ச்சியாக இருக்கும்.

### குணம்

துணிவு, வீரம், அறிவு இருந்தும் சாதுவாக இருப்பர். அச்சமே அற்றவராக இருப்பர். ஆனால், அமைதியாயிருப்பார். இதனால் இவரைக் கோழையெனக் கூறுவாருமுளர். துன்பங்களைத் தாங்கும் சகிப்புத் தன்மை, விடாமுயற்சி இவர்களிடம் உண்டு.

ஆனாலும் இவர்கள் புத்தி தீயவழிகளிலேயே வேலை புரியும். மனம் எதாவது குழப்பத்திலேயே இருக்கும். படிப்பு வராது. நோய் படுத்தும்.

உற்சாகமாக இருக்கவே மாட்டார். ரோசம் மானம் அதிகமிருக்கும். தமக்கு உண்டான அவமானத்தை வெளிப்படுத்த மாட்டார். சில போது புத்தி மங்கும். சில போது புத்தி பிரகாசிக்கும்.

வயதாக ஆக முயற்சி உழைப்பு அலுப்பையே தரும். தெய்வ நம்பிக்கை இருக்கும். பிறர் பண்ணும் சூழ்ச்சி தந்திரம் ஏதும் அறியாமல் அவர் வலையில் சிக்குவர். வாழ்க்கையில் லாபம் அடையும் வழி தெரியாது. பார்த்தால் பாவமாகப்படுவர்.

செயலூக்கம் வரும்போது மிக விரைவில் எதையும் செய்து முடிப்பர். ஒழுக்கம் சங்கதிகளைப் புரிந்து கொள்வதில் நல்லவர். கெட்டிக்காரர் எனப் பாராட்டுப் பெறுவர். சில போது மந்தமாகவே தென்படுவார். எப்போதும் தயாரான நிலையில் இருக்க மாட்டார். கற்பனையில் மூழ்கி உடல், உடை இவற்றில் கவனம் இன்றி அழுக்காக இருப்பர்.

இவர் வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் இவரின் தன்னம்பிக்கையைக் குலைத்துவிடும்.

எதாவது கதைப் புத்தகத்தைப் படித்துக் கொண்டோ, படம் வரைந்து கொண்டோ, கவிதை எழுதியபடியோ நேரத்தைக் கடத்துவார். நோக்கமின்றி அலைவார். செய்யவேண்டியது என்ன என்று தெரியாமல் அதைச் செய்யாமல் அநாவசியமாகப் பொழுது போக்குவார். இதனால் பிரச்சினைகளுண்டாகும். அவற்றை வெல்ல முடியாமலிருப்பார். மேலும் மேலும் பிரச்சினைகளை உண்டாக்கிக் கொள்ளுவார். பெரும்பாலும் பொறுமையாக இருந்தாலும் கோபம் வந்துவிட்டால் குமுறும் எரிமலையாகி விடுவார். இதனால் முன்னேற ஆதரவு கிட்டாமல் போகும்.

காரியங்களைப்பாதியில்விடுவர். வேலையை விட்டுவிட்டுத் திண்டாடுவர். பெரியவர்களையும் எதிர்த்துப்பேசி விடுவர். பிறரை நோக வைக்கும் சுடுசொற்களைச்சொல்லி விடுவர். ஆனால் பிறருக்கு வலிந்துபோய் உதவும் இரக்க குணம் இருக்கும்.

வறுமை வாட்டும். பெண்களிடம் அன்பை எதிர்பார்ப்பர். ஏமாறுவார். உறவினர் நண்பரைப் பிரிந்து தனிப்படுவர். சோகமாகவே இருப்பார். பிற்காலத்தில் ஆன்மிகத்தில் இறங்குவார்.

### குடும்பம்

குடும்பத்தில் பெற்றோர் ஆதரவு குறையும். உடன் பிறந்தோரும் இவரைப் பற்றிக் கவலைப்பட மாட்டார். இவர் வெளியேறி எங்கெங்கோ அலைவார். ஏதோதோ செய்வார். குற்றமும் புரிவார். கோபம் முரட்டுத்தனம் இவர் அறிவை மறைத்து போகும் இடமெல்லாம் பிரச்சினையைத் தரும். பணம் கிடைத்தாலும் மனைவி அழகாய் நல்லவளாய் அமைந்தாலும் குடும்பத்தில் சச்சரவு போராட்டம் இருக்கும். வைத்தியச் செலவு அதிகமாகும்.

### தொழில்

கற்பனை வளமிக்க இவர் நன்றாக எழுதுவார். பேசுவார். கவிதை நன்கு தொடுப்பார். வரலாற்றுப் புதினம் எழுதக்கூடியவர். அடிதடி அரசியல் வரும் கதைகளைப் படிக்கவும் செய்வார்.

இன்ஜினியரிங் போன்ற தொழிற் படிப்பே வரும். யோகம் பழகி வேதாந்தம் துணை கொண்டு சொற்பொழிவாற்றுவர். ஆசனம் பயிற்றுவிப்பர். ஆன்மிக நூல் எழுதுவார். விவசாயம் மருத்துவம் ரியல் எஸ்டேட், எரிபொருள், ரசாயனம் தொடர்பான தொழிலும் பொருத்தம்.

தொழிற்சாலைகளில் சாதாரண வேலை பார்ப்பர். சமையற்காரராகவுமிருப்பார். சினிமா நாடகத்துறையிலும் வானொலி, டி.விகளிலும் பங்குள்ள தொழில் செய்வார்.

மிடியேட்டராக இருப்பர். மின்சாரம் மின்னணு தொடர்பில் வேலையோ வியாபாரமோ பண்ணுவர்.

### நோய்

சிறுசிறு தொல்லைகளை உடல் சிறு வயது முதலே தந்துகொண்டிருக்கும். எலும்பு முறிவு ஏற்படும். விபத்து அடிதடியில் காயம் படும். வாத காய்ச்சல் மூட்டு முதுகுவலி வரும். வயிற்றுவலி உண்டு. தலைவலியிருக்கும். நரம்புத் தளர்வு ஏற்படும். உஷ்ண சம்பந்தமான நோய்களுண்டு. நீரிழிவும் மஞ்சக் காமாலை அக்கி முதலியவையும் தாக்கலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப்பகிர்வு விடயத்தில் இந்தியா தலையிட முடியாது

## அமைச்சர் சம்பிக்க

இலங்கையில் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை சர்வதேச அளவில் கொண்டு செல்கின்றமையே இன்று அரசாங்கத்திற்கு இருக்கும் பெரிய சவாலாகும்.

பயங்கரவாத செயற்பாடுகளுக்கு துணைபோன தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இந்தியா இணங்குவது அதிர்ச்சியளிக்கின்றது என தெரிவிக்கும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க அதிகாரப்பகிர்வு விடயத்தில் அரசாங்கத்தை மீறி எவரும் செயற்பட முடியாது. இந்தியாவிற்கும் இது பொருந்தும் எனவும் தெரிவித்தார்.

13க்கு மேலாக சென்று தீர்வு காண இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துவோம் என இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி தெரிவித்துள்ள நிலையில் இது தொடர்பில் அரசாங்கத் தரப்பினரிடம் வினவிய போதே அரசாங்க பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச்செயலாளரும் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயக ரீதியிலான ஆட்சி முறைமையொன்று இலங்கையில் நடைபெறுகின்ற நிலையில் மூவின மக்களுக்குமான தீர்வு நோக்கி பயணிக்க பல வழிகள் இருக்கின்ற நிலையில் இலங்கை விடயங்களை சர்வதேச மயப்படுத்தும் நோக்கில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கின்றமை கண்டிக்கத்தக்கதொரு விடயமாகும்.

அதேபோல் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய ஆயுதப் போராட்டத்தினை ஆதரித்த இன்றும் சர்வதேச புலம்பெயர் அமைப்புகளுடன் தொடர்புடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இந்தியா உறவு முறையினை கையாள்கின்றமையும் எமக்கு அதிர்ச்சியளிக்கின்றது.



கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோர் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறி சர்வதேச அமைப்புக்களையும் இயக்கங்களையுமே பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இவர்களின் கருத்துக்களையும் கோரிக்கைகளையும் முக்கியப்படுத்தி இந்தியா செயற்படுவது எமக்கு ஏமாற்றமளிக்கின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனித்து இயங்கும் ஒரு சாராரை மட்டும் ஆதரிக்கும் பிரிவினைவாத கட்சி இவர்கள் அரசாங்கத்துடன் இணங்கி செயற்பட ஒருபோதும் விரும்பவில்லை.

**தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோர் சர்வதேச அமைப்புக்களையும் இயக்கங்களையுமே பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.**

அதேபோல் அவர்கள் கேட்கும் மாகாண அதிகாரங்கள் தமிழ் மக்களுக்காகவல்ல மீண்டுமொரு தீய சக்தியினை வடக்கில் உருவாக்கவென்பதை இந்தியா முதலில் தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆரம்பத்தில் இந்தியா தவறிழைத்தமையினாலும் விடுதலைப் புலிகளை ஆதரித்தமையினாலுமே இலங்கை முப்பது வருட கால யுத்தத்திற்கு முகம் கொடுக்க நேர்ந்தது. அதே தவறினை மீண்டும் ஒரு முறை விடுவது இரு நாடுகளுக்குமே பாதிப்பினை ஏற்படுத்தும்.

மேலும், இலங்கையின் அதிகாரப்பகிர்வு விடயத்திலோ அல்லது இலங்கைக்குள் விசாரணை நடத்துவதையோ தீர்வு நோக்கி பயணிப்பதையோ அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும்.

இவ்விடயத்தில் பலரின் தலையீடுகள் கடந்த காலங்களில் நாம் அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுடனோ அல்லது அமெரிக்காவுடனோ பேசுவதனால் இலங்கையில் மாற்றங்கள் ஏற்படப் போவதில்லை.

வடமாகாணத்திற்கு தாராளமான வகையில் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதையும் தாண்டிய பிரிவினைக்கு உதவும் வகையிலான அதிகாரங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருவதனால் அரசாங்கம் வளைந்து கொடுக்க போவதில்லை.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை பாதிக்கும் நடவடிக்கைக்கு இந்தியா துணை போகக்கூடாது. இலங்கையின் நிலைப்பாட்டினை பிரதமர் நரேந்திரமோடி தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ)

# நீடித்திருக்கும் இளமையை விரும்புபவர்களா?

## இதோ உங்களுக்கான சில அறிவுரைகள்



சுருக்கங்கள் அற்ற சருமம் இளமையான தோற்றத்தை எடுப்பாய் காட்டும். 40 வயதைத் தொட்டதுமே, தோலில் ஏற்படும் சுருக்கங்கள் மூப்பு நெருங்குகிறது என்பதைச் சொல்லாமல் சொல்லும். இந்தச் சுருக்கங்களைப் போக்க பலரும் அழகு மெருகூட்டப்படும் நிலையங்கள் மாற்று மருத்துவ சிகிச்சைகள் எனத் தீவிர முயற்சியில் இறங்குவார்கள்.

ஆனால், அவர்களின் கவனம் முழுவதும் முகத்தில் உள்ள சுருக்கங்களைப் போக்குவதில் இருக்குமே தவிர, கை, கழுத்துப் பகுதிகளில் ஏற்படும் சுருக்கங்களை பற்றிய அக்கறை இருக்காது.

வயதின் மூப்பு, சருமத்தில் எங்கெல்லாம் தெரியும்? வந்த சுருக்கங்களைக் குறைக்கவும், வராமல் தடுக்கவும் என்ன செய்யலாம்?

நம் தோலில் உள்ள கொலாஜென் மற்றும் எலாஸ்டின் என்ற புரதங்கள், தோலுக்கு மிருதுவையும், உறுதித்தன்மையையும் தருகிறது. வயது அதிகரிக்கும் போது புரதங்களின் அளவு உடலில் குறையும்.

இதன் காரணமாகவே தோலில் சுருக்கங்கள் ஏற்படுகின்றன.

முதலில் உள்ளங்கையின் மேற்புறத்தில்தான் சுருக்கங்கள் தோன்றும். ஏனெனில், இந்தப் பகுதியில்தான் நீர் அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. பிறகுதான் முகத்திலும், கழுத்துப் பகுதியிலும் தெரியும்.

பொதுவாக, எண்ணெய் சருமம் உள்ளவர்களுக்கு சுருக்கங்கள் அதிகம் வருவது இல்லை. வறண்ட தோல் உடையவர்களுக்கு கொலாஜென் குறைபாட்டால், விரைவில் சுருக்கங்கள் ஏற்பட்டு விடும்.

Health Care
மருத்துவ உலகம்
உங்கள் நலம் உங்கள் கைகளில்

35 முதல் 40 வயதுடையவர்களுக்கு சுருக்கம் ஏற்பட்டால், அது இயற்கையாக வயது அதிகரிப்பதைக் காட்டுகிறது. ஆனால் 25 முதல் 30 வயதுடையவர்களுக்கு சுருக்கம் ஏற்படுமானால், அவர்களின் வாழ்க்கைமுறையிலோ, உணவுப் பழக்கத்திலோ பிரச்சினைகள் அல்லது மரபு சார்ந்த பிரச்சினைகள் இருக்க வாய்ப்புள்ளது.

புகைபிடித்தல், சவர்க்காரம் மற்றும் க்ரீம்களை அடிக்கடி மாற்றுதல், சருமத்தில் சூரிய ஒளி அதிகம் படுதல், மன அழுத்தம், சுற்றுச்சூழல் மற்றும் நம் முக பாவனைகளும் கூட சுருக்கங்கள் வருவதற்கு காரணமாக அமைந்து விடுகின்றன.

மேலும், சிலர் உறங்குவதற்கு முன்பு, முகத்தில் க்ரீம்கள், முல்தானி மட்டி, சந்தனம் என ஏதேனும் பூசிக் கொண்டு உறங்குவார்கள்.

எந்த ஒரு பொருளையும் முகத்தில் ஒரு மணி நேரத்துக்கு மேல் வைத்திருக்கக் கூடாது. இதனால், தோல் வறண்டு, அச்சுப் பதிந்து சுருக்கங்கள் ஏற்பட்டு விடும்.

சரும சுருக்கங்களைப் போக்க மருத்துவ ரீதியாக பல சிகிச்சைகள் இருந்தாலும், அவற்றுக்கான கட்டணம் அதிகம். பக்கவிளைவுகளையும் உண்டாக்கும்.

எனவே, சுருக்கங்கள் வந்தவுடன் அதைப் போக்க முயற்சி எடுப்பதைவிட, வராமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டாலே போதும், என்றும் இளமையாக இருக்கலாம்.

### சரும சுருக்கங்களை தடுக்க எளிய வழிகள்

பச்சைக் காய்கறிகள், பழங்களை அதிக அளவில் உணவில் சேர்த்துக் கொள்வதன்மூலம் இழந்த பொலிவை மீட்டெடுக்கலாம். இதன்மூலம் சருமம் உறுதித்தன்மை அடையும்.

விற்றமின் சி அதிகமுள்ள ஒரேஞ்சு, அன்னாசி போன்ற பழங்களை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இளமையை தக்கவைக்க, மீனுக்கு மிக முக்கிய பங்கு உண்டு. மீனில் ஒமேகா 3 கொழுப்புச் சத்து அதிகம் உள்ளது. இது இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்துவதுடன் நினைவாற்றலையும் அதிகரிக்கும். காட் லிவர் ஒயில் தோலில் எண்ணெய்ச் சத்தை அதிகரிக்கும்.

வாரம் ஒரு முறை, குளிப்பதற்கு முன் பாதாம் எண்ணெய் எடுத்து கை, கழுத்து மற்றும் முகப் பகுதிகளில் தேய்த்து மசாஜ் செய்யலாம். இது இரத்த ஓட்டத்தைச் சீர்படுத்துவதோடு, சுருக்கங்களைத் தடுக்கும்.

தயிர், சுருக்கங்களைத் தடுப்பதில் சிறப்பாகச் செயற்படும்.

கழுத்து மற்றும் கைகளில் தயிரைத் தடவிக் கழுவுவதைத் தொடர்ந்து செய்து வந்தால் சுருக்கங்கள் வராது.

வெயிலில் வெளியில் செல்லும்போது சன்ஸ்கிரீன், குளிர் காலத்தில் மாய்ஸ்சுரைசர்கள் பயன்படுத்தலாம். அதுவும் சருமத்துக்கு ஏற்ற எஸ்பிஎஃப் அளவை பார்த்து க்ரீம்கள் வாங்க வேண்டும்.

முகத்தில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கும் ஒயில் புல்லிங் செய்யலாம்.

வாரம் ஒரு முறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பதும்கூட சருமத்தில் முதுமையை நெருங்கவிடாது.

மூளையையும் மனதையும் எவ்வளவு ரிலாக்ஸ்டாக வைத்திருக்கிறோமோ அதே அளவு நம் உடலும் தோலும் சிறப்பாக இருக்கும்.

மன அழுத்தத்தைக் குறைக்க யோகா, தியானம், யோக முத்திரைகள் போன்ற பயிற்சிகளைச் செய்வது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டை வேடம் போடும் இந்தியப் பிரதமர் மோடி

## ஜே.வி.பி. கண்டனம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுய விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வதற்காக சர்வதேசத்தினை பயன்படுத்துவது நாட்டிற்கு பாதகமாக அமையும். அதிகாரப் பகிர்வு விடயத்தில் இந்தியாவின் தலையீடு அவசியமற்றது எனத் தெரிவிக்கும் ஜே.வி.பி. இலங்கை விடயத்தில் நரேந்திரமோடி இரட்டை வேடம் போடுகின்றார் என கண்டனத்துடன் குற்றம் சுமத்தியுள்ளது.

13 இற்கு அப்பால் சென்று அதிகாரங்களை வழங்க வேண்டும் என இந்திய பிரதமர் இலங்கையை வலியுறுத்தியுள்ள நிலையில் இது தொடர்பில் வினவிய போதே மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபை அதிகாரங்கள், அதற்கு அப்பாற் சென்ற அதிகாரங்கள் அனைத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குத்தான் தேவையே தவிர தமிழ் மக்களின் தேவை இதுவல்ல.

வடக்கில் தமிழ் மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். பொருளாதார ரீதியில் சிக்கல்கள் உள்ளன. இவை அனைத்தையும் விடுத்து மாகாண சபை அதிகாரங்களை கேட்டு நிற்பது தமிழத் தேசியக் கூட்டமைப்பின் சுயநலத் தன்மையினையே வெளிப்படுத்துகின்றது.

யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டதிலிருந்து இன்று வரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாட்டிற்குள் சர்வதேச தலையீடுகளை ஏற்படுத்தவே முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். சர்வதேசத்தினை நம்பி செயற்படுவதை விடவும் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளை கூட்டமைப்பு நீடித்திருக்க முடியும். அரசாங்கமும் தமிழர் விடயத்தில் அக்கறையில்லாது செயற்படுகின்றது. கூட்டமைப்பும் தமிழர் விடயத்தில் சுயநலமாக செயற்படுகின்றது. இவ்வாறு இரு தரப்பினரும் முரண்பாட்டால் ஒருபோதும் இணக்கப்பாட்டினை எட்ட முடியாது. எனினும் இவற்றினை மாற்றியமைக்க நாட்டிற்குள்ளேயே பல வழிமுறைகள் உள்ளன. அவற்றினை கையாள முடியும். அதை விடுத்து இந்தியாவையும் சர்வதேசத்தினையும் நம்பி செயற்படுவதால் தமிழ் மக்கள் விடயத்தில் புதிதாக எவையும் இடம்பெற்று விடப் போவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது சுய இலாபங்களுக்காகவும் சுயநல அரசியலை மேற்கொள்வதற்காகவும் சர்வதேசத்தினை பலப்படுத்திக் கொள்வது இறுதியில் நாட்டிற்கும் மூவின மக்களுக்குமே பாதகமாக அமையும். இலங்கை விடயத்தில் எவரது தலையீட்டிற்கும் இடமளிக்கக் கூடாது. அதிகாரப் பகிர்வு மிகவும் அவசியமானது. மூவின மக்களின் பாதுகாப்பிற்கு ஏற்ற வகையில் நாட்டில் அதிகாரப் பகிர்வொன்றினை ஏற்படுத்த வேண்டுமே தவிர கூட்டமைப்பின் தேவைக்கேற்ற அதிகாரப் பகிர்வு அவசியமற்றது. அதேபோல் கூட்டமைப்பின் தேவ்வயினை பூர்த்தி செய்யும் வகையில் அதிகாரப் பகிர்வினை ஏற்படுத்த இந்தியா தலையிடுவதும் அவசியமற்றது.

மேலும் இலங்கை விடயத்தில் இந்தியா நாடகமாடுகின்றது. அரசாங்கத்தினை ஆதரித்து சர்வதேசத்திடமிருந்து இலங்கையை காப்பாற்றுவதாக கூறி இலங்கையின் வளங்களை சுரண்டுகின்றது. மறுபக்கம் தமிழத் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வடக்கில் பிரிவினைவாத போராட்டம் ஒன்றினை ஏற்படுத்தும் உதவிகளை செய்து கொடுக்கின்றது.

மொத்தத்தில் இலங்கையில் சமாதான சூழல் ஒன்றினை ஏற்படுத்தும் நோக்கம் இந்தியாவிற்கு இல்லை. இலங்கை விடயத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இரட்டை வேடம் போடுகின்றார் என்பது தெளிவாகத் தெரிகின்றது எனவும் அவர் தெரிவித்தார். (இ)

# நைஜீரியர்கள் நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதி மறுப்பு

நைஜீரிய பிரஜைகள் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

எபோலா வைரஸ் தாக்கம் காரணமாக இவ்வாறு நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

குடும்பத்துடன் தாம் இலங்கைக்கு சென்றிருந்ததாகவும் இலங்கை அதிகாரிகள் நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கவில்லை எனவும் நைஜீரியாவைச் சேர்ந்த அகின்குனி அட்செய்யீ என்பவர் அந்நாட்டு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

தம்மை ஏனைய பயணிகளிடமிருந்து பேறுபடுத்திவைத்திருந்ததாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எபோலா வைரஸ் தீவிரமாக பரவி வருவதாகவும் இதனால் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ)

## கேரளா கஞ்சா பொலிஸாரால் மீட்பு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த லொறி ஒன்றிலிருந்து ஒரு தொகை கேரள கஞ்சாவை நேற்று முன்தினம் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதன் போது இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஒரு கிலோ 200 கிராம் கேரள கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

### தெய்வீக இசையரங்கு

நல்லூர்மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளம் கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்குதினமும்மாலை 6.45 மணி முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்றைய பூங்காவன விசேட நிகழ்வாக இளங்கலைஞர் மன்ற இசை, நடன ஆசிரியர்களின் தயாரிப்பில் மாணவர்கள் வழங்கவுள்ள வினை அறுக்கும் வேலாயுதா நடன அளிக்கை இடம்பெறவுள்ளது. இதில் நட்டுவாங்கம் ஸ்ரீ கண்ணன், பாடல் ஏ.அமிர்த சிந்துஜன், கீபோட் என்.செல்வச்சந்திரன், வயலின் கே. பத்மநாதன், மிருதங்கம் ஜி.கண்ணதாஸ் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

### தெய்வீக கலையரங்கு

நல்லூர்மஹோற்சவத்தை முன்னிட்டு வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் தெய்வீககலையரங்குதினமும் மாலை 4 மணி தொடக்கம் 5.30 மணிவரை நல்லை ஆதீனத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்றையதினம் தீவக வலய மாணவர்களின் கலையரங்க நிகழ்வுகளும் ஏ.கிருஷ்ணானந்தனின் பண்ணிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

### ஆன்மீக அருளுரை

நல்லூர்முருகப்பெருமான்ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மீக அருளுரை தினமும் இரவு 7.15 மணிக்கு நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் சின்மயா மிஷன் யாழ். வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யாவல்வழங்கப்பட்டு வருகின்றதுஇன்றையதினம் குருதேவர் சுவாமி சின்மயானந்தர் எனும் தலைப்பிலான அருளுரை இடம்பெறவுள்ளது.

### இசைப்பேருரை


நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தைமுன்னிட்டுநல்லூர்சைவமகா சபையின்ஏற்பாட்டில்இடம்பெற்றுவருகின்ற கம்பராமாயண இசைப்பேருரை தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரைநல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் பிரம்மஸ்ரீ. சிவ.வை.நித்தியானந்த சர்மாவால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இன்றையதினம் ஸ்ரீராம பட்டாபிஷேகம் எனும் தலைப்பிலான இசைப் பேருரை இடம்பெறவுள்ளது.

### ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர்மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள்திணைக்களம்நடத்தும்ஆன்மீக சொற் பொழிவும் கலை நிகழ்வும் தினமும் பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்றைய தினம் சிவத்தமிழ் சொல்லழகர் ச.லலீசன் வழங்கவுள்ள குறியும் நெறியும் எனும் தலைப்பிலான சொற்பொழிவும் காரைநகர் கிழவன்காடு கலாமன்ற அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (இ)

# நல்லூரான் திருவடிக்கு இன்று பூங்காவனத் திருவிழா




## வாழ்த்துகிறோம் வடிவேலா



மண்ணில் நல்லவண்ணம் வாழும் பேறுபெற
புண்ணிய காலமெனும் ஈர்பத்து ஐந்நாளும்
நோன்புற்று தொழுது நின்றோம் நல்லையிலே
கண்ணில் நிறைந்து எண்ணுதலை ஏற்றருளியவா
வண்ணமலர் அலங்கரிக்கும்
தண்டி கையில் மங்களகரனாக
வந்தருளிநிறைவுகொள வாழ்த்துகிறோம் வடிவேலா

**கலைப்பரிதி(சிவ. சிவநேசன்)**

## பூங்கா வனத்தில் வெற்றி வேலன்



வென்று வினை தீர்த்திடுவாய்
வெற்றி வேலா!
நன்று செய்வாய் நன்று செய்வாய்
நல்லைக் கந்தா!
பசுக்கன்றினைக் கொன்றதற்கு
பரிவு இன்றி!
தனது பாலனையே பலி கொடுத்தான்
பழைய வேந்தன்!
இன்று தர்மம் அழிகின்றதே வேல்முருகா!
மன்றிலேனும் நீதி வராதா மால்மருகா

**வாணியழகன் (முரசுமோட்டை)**

## கிண் கிணி அணிந்த கந்தா!இன்று பூங்காவனத்தில் எழுந்தருளிவா!



கணபதியின் தம்பி நீ கந்தசாமி காத்தருளும்
காவடி ஆடி வரும் கர்ப்பூரம் ஏந்திவரும் பக்தர்
கிண்கிணி அணிந்த நல்லூரானே
குறமகள் வள்ளியவள் கரம் பிடித்த கந்தா!
நல்ல பாம்பணிந்த சிவன் அவன் புத்திரன்
நங்கை பார்வதி புத்திரன் நல்லூரானே

**இராஜராஜன் -காவியா(கன்டிகோலா லண்டன்)**

## நல்லூர் சரவண பவனே போற்றி

மூவிரு குழந்தைகளாய் சரவணப் பொய்கையில்
தவழ்ந்த முருகனே! செந்தில் முதல்வனே
மூவிரு கார்த்திகைப் பெண்கள் பாலூட்ட
சிவனுமைஅருளூட்ட
மூவிரு முகங்களும் ஆறிரு கரங்களுடனும்
கந்தனாய் எழுந்து தேவர் துயர் தீர்த்த
நமையாளும் வேந்தனே போற்றி ! போற்றி!!

**மாதாஜி (குப்பிளான்)**

## நல்லைக் கந்தன் நனிவெண்பா



ஆயிரத்தைப் பேசி யார்ப்பரித்துத் திரியாதுன்
பாயிரத்தைச் சொன்னாலே பயனுண்டாம்-தாயன்பாய்
தேடிவரும் நல்லூர்த் திருக்குமரன் தாள் போற்றிப்
பாடுவதே எந்தன் பணி

**கலாபூஷணம் சந்தக் கவிஞர்**
**நவ.பாலகோபால்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பிலுள்ள பாதுகாப்பு அலகை இந்தியா பலப்படுத்தியது ஏன்?



இலங்கையில் சீனாவின் தலையீடுகள் குறித்து இந்தியா கவலை கொள்ளவில்லை என்று கடந்தவாரம், பா.ஜ.கவின் முக்கிய தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்திருந்தார்.

ஆனால், அவர் இதனைக் கூறுவதற்கு முன்னரே இந்தியா மேற்கொண்ட ஒரு நகர்வு இலங்கையில் சீனாவின் தலையீடுகள் அதிகரித்து வருவது குறித்து இந்தியா க்வலை கொண்டுள்ளது என்பதை உணர்த்தியிருக்கிறது.

கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தில் பிரதிப் பாதுகாப்பு ஆலோசகராக- லெப். கேர்ணல் குரிந்தர் எஸ்.கிளேயர் என்ற இந்திய இராணுவ அதிகாரியின் நியமனமே இந்த நகர்வாகும்.

இதுவரையில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் இந்தியக் கடற்படையைச் சேர்ந்த அதிகாரிகளே பாதுகாப்பு ஆலோசகர்களாக நியமிக்கப்படுவது வழக்கமாக இருந்து வந்தது.

இப்போது இந்தியத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராக இருப்பவர் கப்டன் பிரகாஸ் கோபாலன். இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். இவருக்கு முன்னர் இப்பதவியில் இருந்தவர் கப்டன் கபூர்.

இலங்கையின் அமைவிடம் இந்தியக் கடற்படைக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால்தான் கடற்படை அதிகாரி ஒருவர் இங்கு பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டு வருகிறார்.

ஆனால், இதுவரையில் இராணுவ அதிகாரி ஒருவர் இந்தியத் தூதரகத்தில் நியமிக்கப்படாதது போலவே பிரதிப் பாதுகாப்பு ஆலோசகர் என்ற பதவியும் இருந்ததில்லை.

திடீரென புதிதாக பிரதிப் பாதுகாப்பு ஆலோசகர் பதவி உருவாக்கப்பட்டுள்ளது மட்டுமன்றி அந்தப் பதவிக்கு இந்திய இராணுவப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த அதிகாரி ஒருவரையும் நியமித்திருக்கிறது இந்திய அரசாங்கம். இது ஒன்றும் முக்கியத்துவமற்ற விடயமல்ல.

கடந்த 15 ஆம் திகதி இந்திய சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் கொழும்பில் நடைபெற்றபோதுதான் இந்த விபரங்கள் ஊடகங்கள் மத்தியில் வெளிச்சத்துக்கு வந்தன.

காலையில் இந்தியா ஹவுஸில் நடந்த கொடியேற்ற விழாவின் பின்னர் புதிதாக நியமிக்கப்பட்ட இந்திய இராணுவ அதிகாரியும் கலந்து கொண்டிருந்தார். ஆனால், அப்போது அவர் முன்னுக்கு வரவில்லை.

மாலையில் பத்தரமுல்லையில் அமைந்துள்ள இந்திய அமைதிப்படையினரின் நினைவுத் தூபியில் நடந்த அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹாவுக்கு இருபுறமும் கப்டன் பிரகாஸ் கோபாலனும் லெப்.கேர்ணர் குரிந்தர் எஸ்.கிளேயரும் நின்றிருந்தனர்.

அதற்குப் பின்னர்தான் இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்பு அலகு வலுப்படுத்தப்பட்ட விவகாரம் வெளியே தெரிய வந்தது.

இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தியாளர் பாலச்சந்திரன் அந்தச் செய்தியை வெளியிட[illegible] இலங்கை ஊடகங்களில் அது பரபரப்பான செய்தியாக மாறியது.

எனினும் லெப்.கேர்ணல் குரிந்தர் எஸ்.கிளேயர் என்பதற்குப் பதிலாக கேர்ணல் குரிந்தர் எஸ்கிளேயர் என்றே செய்திகள் வெளியாகின.

ஆனால், இந்த இராணுவ அதிகாரியின் பதவிநிலை லெப்.கேர்ணல் என்பதே சரியானது.

அவரது தோட்பட்டையில் காணப்படும் இந்திய அரசுச் சின்னமும் ஒரு நட்சத்திரமும் லெப்.கேர்ணல் தரத்தின் அடையாளங்கள்.

அதைவிடப் பாதுகாப்பு ஆலோசகராக உள்ள பிரகாஸ் கோபாலன் இந்தியக் கடற்படையின் கப்டன் தர அதிகாரியாவார். அது இராணுவத்தின் லெப்.கேர்ணல் பதவிக்கு நிகரானது.

பாதுகாப்பு ஆலோசகராக இருக்கும் கடற்படைக் கப்டன் அதிகாரியைவிட பதவியில் உயர்ந்த இராணுவ கேர்ணல் ஒருவரை அவருக்கு கீழ் நியமிக்க முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த நிலையில் திடீரென இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்புப் பிரிவு வலுப்படுத்தப்பட்டதும் மரபுகளுக்கு மாறாக இராணுவ அதிகாரி ஒருவர் பிரதிப் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டதும் பலத்த கேள்விகளை எழுப்பியுள்ளது உண்மை.

சீனாவுக்கும் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகள் நெருக்கமடைந்து வருவதன் விளைவே இந்த நியமனம் என்று பரவலாக நம்பப்படுகிறது.

இலங்கையில் சீனா தனது பொருளாதார நலன்களை மட்டுமன்றி பாதுகாப்பு நலன்களையும்கூட வலுப்படுத்தி வருகிறது.

இலங்கையைத் தமது பாதுகாப்பு நலன்களுக்காகப் பயன்படுத்தவில்லை என்று சீனா கூறிக்கொண்டிருந்தாலும் எந்த நாடும் மூன்றாவது நாடு ஒன்றுக்கு எதிராக இலங்கையைப் பயன்படுத்த அனுமதிக்கமாட்டோம் என்று இலங்கை அரசாங்கமும் கூறிக்கொண்டிருப்பினும் இருதரப்பு உறவுகள் பாதுகாப்பு நலன்களைச் சார்ந்தே முன்னகர்த்தப்படுகின்றன.

இவை குறித்து இந்தியா சந்தேகம் கொள்கிறது என்பதும் அவதானமாக இருக்கிறது என்பதும் வெளிப்படை.

அண்மைக்காலமாக இந்தியப் பெருங்கடலில் சீனாவின் இராணுவத் தலையீடுகள் அதிகரித்துவருவது குறித்து இந்தியா கவலை கொண்டிருக்கிறது.

ஆனால், அதனை வெளிக்காட்டிக் கொள்வதில்தான் இந்தியாவுக்குத் தயக்கமாக இருக்கிறது.

ஒருவேளை, அதனை வெளிப்படையாக கூறப்போனால் தாம் பயப்படுகிறோம் என்றோ தமது பலவீனம் என்று உணரப்பட்டுவிடும் என்றோ இந்தியா அஞ்சுகிறதா என்று தெரியவில்லை.

கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தில் முதன் முறையாக பாதுகாப்பு ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டதை அடுத்தே இந்தியாவும் பதில் பாதுகாப்பு ஆலோசகராக இராணுவ அதிகாரி ஒருவரை நியமித்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

கொழும்பில் சீனத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகர் என்றொரு பதவிக்கு யாரும் நியமிக்கப்படும் வழக்கம் இருக்கவில்லை.

இப்போது சீனத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளது உண்மையே.

எனினும் சீனத்தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகர் நியமிக்கப்பட்டது.

அண்மைய நாட்களில் நடந்த ஒரு நிகழ்வு அல்ல. சில ஊடகங்கள் இப்போதுதான் சீனத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டதையடுத்தே இந்தியாவும் உடனடியாக பதில் பாதுகாப்பு ஆலோசகர் ஒருவரை நியமித்ததாக செய்திகளை வெளியிட்டிருந்தன.

ஆனால், சீனத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டு ஒரு வருடமாகிவிட்டது.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் பாதுகாப்பு ஆலோசகராக சீன இர்ராணுவ அதிகாரி மூத்த கேர்ணல் லீ. செங்லிங் கொழும்பில் பதவியேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, சீனத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராக கேர்ணல் லீ.செங்லீங் நியமிக்கப்பட்டதன் உடனடி விளைவாக இந்தியா லெப்.கேர்ணல்' குரிந்தர் எஸ்.கிளேயரை நியமிக்கவில்லை.

ஆனால், இந்த நியமனத்தில் சீனாவின் பாதுகாப்பு ஆலோசகர் நியமனமும் ஒரு தாக்கத்தைச் செலுத்தியிருந்தது என்பது மறுக்கமுடியாது.

அதேவேளை, அண்மைக் காலங்களில் சீனாவின் முக்கிய படைத் தளபதிகள், பாகிஸ்தான் தளபதி, அதிகாரிகளின் வருகைகள் மட்டுமன்றி, சீனக்குடாவில் சீன விமானப் பராமரிப்பு நிலையத்தை அமைக்கும் முடிபு கூட இந்தியாவின் இந்த முடிபில் தாக்கத்தைச் செலுத்தியுள்ளன.

சீனாவின் பாதுகாப்பு நலன்கள் இலங்கையில் விரிவாக்கப்பட்டதையிட்டு, இந்தியா கவலையோ, அக்கறையோ கொள்ளவில்லை என்ற கருத்தை இந்த நகர்வு மாற்றிவிட்டிருக்கிறது.

இலங்கையை சீனா எந்தளவுக்குத் தனது நலனுக்குப் பயன்படுத்த எத்தனிக்கிறதோ அந்தளவுக்கு இந்தியாவும் தனது நலனில் அக்கறை கொண்டுள்ளது.

இதைத்தான் இந்தியத் தூதரகத்தில் புதிய பிரதிப் பாதுகாப்பு ஆலோசகரின் நியமனம் உறுதிப்படுத்துகிறது.

இவற்றுக்கெல்லாம் அப்பால் இலங்கையில் சீனாவின் தலையீடுகள் குறித்து கவலை கொள்ளவில்லை என்று இந்தியா கூறுவதும் இலங்கையில் பாதுகாப்பு நலன்களை அடைய முயற்சிக்கவில்லை என்று சீனா கூறுவதும், இந்திய நலனுக்கு விரோதமாக எதையும் செய்ய அனுமதிப்போம் என்று இலங்கை கூறுவதும் உண்மையான விடயங்கல்ல.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி அதிகாரம் வழங்க முடியாது

## அரசு திட்டவட்டம்



பசறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

(கொழும்பு)

வடக்கு கிழக்கிற்கு காணி அதிகாரங்கள் வழங்கப்படமாட்டாது என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வட மாகாணசபை கோருவதனைப் போன்று காணி அதிகாரங்கள் வழங்கப்பட போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கிற்கு காணி மற்றும் பொலிஸ அதிகாரங்கள் வழங்கப்பட்டால் மீண்டும் ஆயுதப் போராட்டமொன்று வெடிக்க வழியமைக்கும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணையக் கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஐரோப்பாவில் முழு அளவில் இயங்கி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையில் மீள ஒருங்கிணைந்தால் அது யாழ்ப்பாண மக்களுக்கே அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதம் மீண்டும் தலை தூக்க இடமளிக்க முடியாது என றும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பிற்கும் வட மாகாணசபைக்கும் தேவை யானதை செய்ய முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்திற்கு காணி மற்றும் பொலிஸ் அதி காரங்களை வழங்கக் கூடிய சாத்தியம் ஒரு போதும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இலங்கையின் உள் விவகாரங்களில் இந்தியத்தலையீட்டை ஏற்க முடியாது!

## பாகிஸ்தான் அறிவிப்பு

உள் விவகாரங்களில் வேறு தரப்பினர் தலையீடு செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும்இலங்கைக்கு தொடர்ச்சியாக ஒத்தழைப்பு வழங்கப்படும் என பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

நெருக்கடியான தருணங்களில் இலங்கைக்கு பாகிஸ்தான் பக்க பலமாக செயற்பட்டுள்ளதாக இலங்கைக்கான முன்னாள் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மொஹமட் அயுப் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளினால் பிரயோகிக்கப்பட்டு வரும் அழுத்தங்களை சமாளிக்க பாகிஸ்தான் இலங்கைக்கு பூரண ஆதரவினை வழங்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சரியான பாதையில் பயணம் செய்வதாகவும், சிறந்த முறையில் நல்லிணக்க முனைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உள்விவகாரப் பிரச்சினைகளில் வேறு தரப்பினர் தலையீடு செய்வதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் மேற்குலக நாடுகளின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க மனிதவுரிமை விவகாரங்களை இந்த தரப்பினர் பயன்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.


பாகிஸ்தானுடன் இலங்கை பேணி வரும் உறவுகள் தொடர்பில்எவ்வித முரண்பாடும்கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.(இ)

# மஹிந்தவின் அழைப்பினை ஏற்று இலங்கைக்கு வருவாராம் மோடி

## அமைச்சர் கெஹலிய நம்பிக்கை







(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஏற்றுக் கொள்வார் என்ற நம்பிக்கை உள்ளது என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இது தொடர்பில் அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை ஜனாதிபதி பாலஸ்தீனத்திற்கு நிதியுதவியை வழங்க முன்வந்ததில் தவறு எதுவுமில்லை. நட்புறவு நாடொன்றுக்கு தேவை எழும்போது உதவுவதில் தவறில்லை, இலங்கை அவ்வளவு வறுமையான நாடும் இல்லை. அதனால் இலங்கை ஜனாதிபதி உதவினார்.

சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைவர்கள் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர். இது இலங்கை மீதும் அதன் எதிர்காலம் குறித்தும் இந்த இரு நாடுகளும் வைத்திருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

மேலும் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஏற்பார் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# இன்று ஒரு தகவல்

## தீர்மானிக்கும் திறமை

எனக்குத் தெரிந்த ஒரு அதிகாரி ரொம்ப விவகாரமானவர். அனுபவசாலியும் கூட. அவருக்குக் கீழ் நிறையப் பேர் வேலை செய்கிறார்கள். நான் ஒருநாள் அவரைப் பார்க்க அவரது அலுவலகத்திற்குப் போயிருந்தேன். அவருடன் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தேன்.

அந்த நேரத்தில், அவரிடம் வேலை பார்க்கும் ஒருவர் ஏதோ ஒரு பிரச்சினையுடன் உள்ளே வந்தார். அது அவர்களுடைய அலுவலகம் சம்பந்தமான ஒரு பிரச்சினை. "இந்தப் பிரச்சினையை எப்படி சமாளிக்கலாம்... இதற்கு என்ன தீர்வு?" என்று உள்ளே வந்தவர் கேட்டார்.

உடனே அந்த அதிகாரி அவரை உட்காரவைத்து அவரையே பிரச்சினையை தெளிவாக விளக்குமாறு கூறினார். இந்தப் பிரச்சினைக்கு என்ன காரணம் இருக்கும்... என்னென்ன முறைகளில் தீர்வுகாணலாம் என்பதையும் அவரிடமே கேட்டார்.

அவரும் யோசித்துப் பார்த்துவிட்டு, ஒரு நாலைந்து தீர்வுகளைச் சொன்னார். அதில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து... அந்த வழியிலேயே அதை செய்து முடிக்கச்சொல்லி அனுப்பினார். பிரச்சினையோடு வந்தவர் அதற்கான தீர்வுடன் திரும்பிப் போனார்.

நடந்ததையெல்லாம் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த நான் அந்த அதிகாரியிடம், "ஏன் சார்... உங்களுக்கு கீழ் வேலை செய்பவர் உங்களிடம் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தானே வருகிறார். ஆனால், நீங்கள் அவரை உட்கார வைத்து அந்தப் பிரச்சினைக்கு என்ன தீர்வு என்று கேட்கிறீர்களே... இதுதான் நிர்வாகமா? " என்று கேட்டேன்.

"ஆமாம்" என்றவர். அதற்கு விளக்கமும் கொடுத்தார். நம்மிடம் வேலை பார்க்கும் ஒருவர் பிரச்சினையோடு மட்டும் வருபவராக இருக்கக்கூடாது... அவர் வரும் போதே அதற்கான தீர்வுகளையும் கொண்டு வருபவராக இருக்க வேண்டும். அந்த அளவுக்கு அவரைத் தயார் படுத்த வேண்டியது நமது பொறுப்பு. ஒரு விடயத்தை தீர்மானிப்பவர் அல்லது முடிவெடுப்பவர் (Decision Maker) எப்படி இருக்க வேண்டும்?

வெறுமனே தீர்மானிப்பவராக மட்டும் இருக்கக் கூடாது. தீர்மானிப்பதற்கு கற்றுக்கொடுப்பவராகவும் இருக்க வேண்டும். அப்படிக் கற்றுக்கொடுத்தால்தான் அவர்கள் வாழ்க்கையில் முன்னேற முடியும்.

அவர்களே பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதற்கும் அதற்குச் சரியான தீர்வு கண்டுபிடிப்பதற்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால் அவர்களின் வளர்ச்சிக்கு நாம் உதவுகிறோம் என்று அர்த்தம். அப்படியல்லாமல், பிரச்சினையுடன் வருபவர்களை உட்கார வைத்து நாம் யோசித்து முடிவு சொல்லி அனுப்பினால்... அவர்களின் வளர்ச்சிக்கு நாம் தடையாக இருக்கிறோம் என்று அர்த்தம்.

இதைப் புரிந்துகொண்டு ஒரு தலைமை அதிகாரி தனக்குக் கீழ் உள்ள பணியாளர்களை பழக்கப்படுத்த வேண்டும். பிரச்சினைகளைக் கொண்டு வருபவர்களே அதற்கான சில தீர்வுகளையும் கொண்டுவரும் அளவுக்கு அவர்கள் சுயமாக சிந்திக்க வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

அப்படி இல்லாமல், அதை தீர்மானிக்க நீ யார்... இங்கு நான்தான் எல்லாமே... என்று சொல்பவர் விபரம் இல்லாதவர் என்று அர்த்தம்.

முடிவெடுப்பதற்கும் பிரச்சினகளைத் தீர்ப்பதற்கும் சுயமாக சிந்திக்கும் திறமை வளரவேண்டும். பணியாளர்களுக்கு சுயமாக சிந்திக்கும் திறமை வளர்வதற்கு மேலதிகாரிகள் ஒரு கிரியா ஊக்கியாக (Catalyst) செயற்பட வேண்டும். அப்படிச் செயற்படுபவர்தான் ஒரு சிறந்த நிர்வாகி.

இன்றைக்குப் பல இடங்களில் இப்படியான நிலைமை இருப்பதில்லை. அதனால்தான் எந்த அலுவலகத்தில் போய் ஒரு சிறிய விபரம் கேட்டாலும்... ''எனக்குத் தெரியாது... மேலதிகாரிய்யப் போய்ப் பார்!" என்று கை காட்டுவார்கள்.

ஒரு அலுவலகத்தில் ஒரு கிளார்க் வந்து தனது கதிரையில் உட்கார்ந்தார். எதிரேயுள்ள மேசையில் ஒரு தேள் இருந்தது. இவரும் அதை உற்றுப் பார்த்தாரே தவிர அதை அடிக்கிற மாதிரி தெரியவில்லை. அதைவிட்டு கடிகாரத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். அந்த நேரத்தில் நான் போய்ச் சேர்ந்தேன். ''ஏன் தேளை அடிக்காமல் கடிகாரத்தையே பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள்" என்று கேட்டேன். அதற்கு அவர் ''10 மணிக்குத்தான் எங்கள் முகாமையாளர் வருவார். அவரிடம் அனுமதி கேட்டு அடிக்கலாம் என்று பார்க்கிறேன் " என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேப்பாபிலவு இராணுவ வசமுள்ள காணிகளை விடுவித்து விவசாயத்துக்கு உதவக் கோரிக்கை

## பாதிக்கப்பட்ட மக்கள்

(முல்லைத்தீவு)

கேப்பாபிலவு கிராமத்தில் 58 விவசாய குடும்பங்களுக்கான இராணுவ வசமுள்ள 520 ஏக்கர்கள் கொண்ட விவசாய காணிகளை விவசாயம் மேற்கொள்வதற்கு விடுவித்து தருமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு பாதிக்கப்பட்ட விவசாய குடும்பங்கள் கோரிக்கையொன்றை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் இறுதியாக மீள்குடியேற்றம் இடம் பெற்ற கிராமம் கேப்பாபிலவு ஆகும்.

கேப்பாபிலவு மக்களின் குடியிருப்பு காணிகளும் விவசாய காணிகளும் நூறு வீதம் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்த காரணத்தால் இக்கிராம சேவையாளர் பிரிவிலுள்ள சீனியாமோட்டைப் பகுதியில் தனியாருக்கு சொந்தமான காணியை உரிமையாளர்களின் ஒப்புதலுடன் சுவீகரித்து அந்தப் பகுதிக்கு கேப்பாபிலவு மாதிரி கிராமம் எனும் பெயரை சூட்டி யுத்தத்தால் இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையத்தில் வசித்து வந்த கேப்பாபிலவு கிராம மக்களை அரசாங்கம் 20.09.2012 இல் தற் காலிகமாக அங்கு மீள்குடி யேற்றியது.

தற்போது 373 குடும்பங்கள் கால் ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட குறித்த மாதிரி கிராமத்தினுள் முடங்கிய நிலையில் துன்பியல் வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

கேப்பாபிலவு கிராம மக்கள் முதலில் தமது சொந்த குடியிருப்பு காணிகளை விடுவித்துத் தருமாறு இராணுவத்தினரிடம் கோரிய போது இடம் பெயர்ந்த அம்மக்களின் நியாயமான கோரிக்கையை இராணுவத்தினர் அசண்டை செய்தனர்.

இந்நிலையில் குடியிருப்பு காணிகளை இராணுவம் தர மறுத்த போது இரண்டாவது கோரிக்கையாக இராணுவம் அடாத்தாக பிடித்து வைத்துள்ள தமது விவசாய நிலங்களை யாவது முதலில் விடுவித்து விவசாயத்தை மேற்கொள்ள அனுமதி தருமாறு கோரி பல மனுக்களை இராணுவத்திடம் கையளித்திருந்தனர்.

இதன்விளைவாக 2013 இல் முதற்கட்டமாக கேப்பாபிலவு சீனியாமோட்டைப் பகுதியில் 14 ஏக்கர் விவசாய நிலங்களும் இரண்டாவது கட்டமாக கேப்பாபிலவு பகுதியான உடையாவெளி, பொறுக்கன் மோட்டை, ஈச்சம் புலவு ஆகிய பகுதிகளில் 150 ஏக்கர் விவசாய நிலங்களும் கேப்பாபிலவு விவசாய மக்களின் நலன் கருதி முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் இராணுவ கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் எல்.பி.ஆர் மார்க்கின் முயற்சியால் விடுவிக்கப்பட்டது.

தற்போது முல்லைத்தீவு இராணுவ கட்டளை தளபதியாக பணியாற்றும் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் முயற்சியால் 2014 மூன்றாம் கட்டமாக 03.04.2014 அன்று கேப்பாபிலவு வாவெட்டிப்பகுதியிலுள்ள பிட்டிக் கொட்டுப்பகுதியிலுள்ள 90 ஏக்கர் விவசாய நிலங்களை விவசாய மக்களின் நலன்கருதி விடுவிக்கப்பட்டது.

இந்நிலையில் இன்னும் விடுவிக்கப்படாத 520 ஏக்கர் விவசாய காணிகள் தற்போது இராணுவ வசமுள்ளன.

மிகுதியான அந்த விவசாய காணிகளையும் மீட்டுத் தரக் கோரி முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் 03.04.2014 அன்று விவசாய மக்களால் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. கையளிக்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரை இது தொடர்பாக எதுவித பதிலும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் விடுவிக்கப் படாத நிலையில் இயங்கன் குளப்பகுதியில் 34 விவசாயிகளுக்குரிய 89 ஏக்கர் விவசாய காணிகளும் வாவெட்டிக் குளப்பகுதியில் 24 விவசாயிகளுக்குரிய 431 ஏக்கர் விவசாய காணிகளுமாக மொத்தம் 58 விவசாயிகளுக்கு சொந்தமான 520 ஏக்கருக்குரிய விவசாய காணிகள் இராணுவ வசமுள்ளதால் நாம் மீள்குடியேறி இரு வருடங்கள் கடந்தும் விவசாய தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை யில் தற்போது 58 குடும்பங்களும் பட்டினிச்சாவை எதிர்நோக்கி வருகின்றனர். அத்துடன் இரு வருடங்களுக்கான நட்ட ஈட்டினையும் இதுவரை வழங்கவில்லை. ஏனைய விவசாய காணிகளை விடுவித்தது போல் 58 விவசாயிகளுடைய காணிகளையும் விடுவித்து விவசாயத்தை மேற்கொள்ள முல்லைத்தீவு மாவட் டத்தளபதி நடவடிக்கை எடுப்பதன் மூலமே தமது வாழ்வாதார த்தை மீளப் பெற்றுக் கொள்ள முடியும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-267)



## நிர்வாகத் தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேசத்திற்குட்பட்ட அம்பாள்குளம் கிராமத்திற்கான கிராம அபிவிருத்தி சங்க நிர்வாகத்தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இதன்போது தலைவராக தம்பு சேதுபதி, உப தலைவராக ந.நாகலிங்கம், செயலாளராக துரைராசி கிருஷ்ணசாமி, உப செயலாளராக தி.தவராசா. பொருளாளராக கிருஷ்ணசாமி செல்வரெட்ணம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 8 உறுப்பினர்களும் தெரிவாகினர். (2-271)




# சடலங்களை எரிப்பதற்கு கொட்டகை அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் ஆனந்தநகர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள பொது மயானத்தில் சடலங்களை எரிப்பதற்கான எரியூட்டல் கொட்டகை அமைக்கப்படவில்லையென சடலங்களை எரியூட்ட வருவோர் கவலை தெரிவிக்கின்றனர்.

மழை காலங்களில் எரியூட்டல் கொட்டகையின்மையால் பல சிரமங்களை எதிர் கொள்வதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இம்மயானத்திற்கு சடலங்களை எரியூட்டுவதற்காக ஆனந்தநகர், விநாயகர்புரம், அம்பாள் குளம், கனகபுரம், உதயநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வருகின்றனர்.



இவ்வாறு வரும் போது திறந்த வெளியில் நான்கு புறமும் புகையிரத தண்டவாளங்களை வைத்து அதன் மேல் விறகுகளை அடுக்கி சவப்பெட்டியை வைத்து எரியூட்டு வதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை மயானத்தில் வன்னி யுத்தத்திற்கு முன்னர் சடலங்களை எரியூட்டுவதற்காக வரும் மக்கள் நிற்பதற்கென மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

யுத்தம் இடம்பெற்ற போது குறித்த மண்டபம் சேதமடைந்து மக்கள் மீள்குடியேறி ஐந்து வருடங்கள் கடந்துள்ள நிலையில் அதற்கான திருத்த வேலைகள் எதுவும் இது வரை ஆரம்பிக்கப்பவில்லை. இம் மண்டப திருத்த வேலைக்கென் கரைச்சி பிரதேச சபையினரால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் அதற்கான வேலைகள் முன்னெடுக்கப்படவில்லையென மக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனமெடுத்து காலம் தாழ்த்தாது வேலைத் திட்டங்களை மழை காலத்திற்கு முன்னர் ஆரம்பித்து நிறைவேற்றித் தருமாறு பொது மக்களால் கோரிக்கை விடப்படுகிறது. (2-271)

## கூட்டத் திகதி பிற்போடப்பட்டுள்ளது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் .

இக்குழுக்கூட்டம் வடமாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன், வன்னி மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும் வணிக கைத்தொழில் அமைச்சருமான றிசாத் பதியுதீன் ஆகியோரின் இணைத்தலைமையில் நடைபெறும்

இக்கூட்டம் கடந்த 19 ஆம் திகதி நடைபெற இருந்தமை குறிப்பிடத் தக்கது. (2-267)

# குடிதண்ணீர் வழங்குவதற்கு போதியளவு பவுசர்கள், நீர்த்தாங்கிகள் கைவசம் இல்லை

## தந்துதவுமாறு அமைப்புக்களிடம் கோருகிறார் கரைச்சி பிர.சபை தவிசாளர்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சி பிரதேச சபையின் கீழுள்ள 50 கிராமங்கள் குடிநீருக்கு விண்ணப்பித்துள்ள நிலையில் தற்போது 30 கிராமங்களைச் சேர்ந்த 18 ஆயிரம் குடும்பங்களுக்கே குடிநீர் விநியோகிக்கப்படுவதாகவும் மிகுதி கிராமங்களுக்கு குடிநீர் விநியோகிப்பதற்கு பவுசர் வண்டிகளும் நீர்த்தாங்கிகளும் போதியளவு கையிருப்பில் இன்மையால் அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள், புலம்பெயர் வாழ் தமிழ் உறவுகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அன்பளிப்பு செய்து உதவுமாறு கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வை.குகராசா அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

அத்துடன் மிகுதியான 20 கிராமங்களுக்கு குடிநீர் விநியோக இரண்டு பவுசர் வண்டிகளும் 2 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் லீற்றர் கொள்ளளவு தாங்கும் நீர்த் தாங்கிகள் இருபதும் தந்துதவுவதன் பொருட்டு குடிநீர் தேவையை நிவர்த்தி செய்யலாமென அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அவசர வேண்டுகோளில், கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் வரட்சியால் 50 கிராமங்களில் வாழும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கு குடிநீர் வழங்கும் பாரிய பொறுப்பு எம்மிடம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடற்கரையை அண்மித்த கிராமங்களான உமையாள்புரம், தட்டுவன் தொட்டி, ஆனையிறவு, ஊரியான், கல்லாறு, சுண்டிக் குளம் ஆகிய கிராமங்களுக்கும் தொடர்ச்சியாக நீர் வழங்க வேண்டிய தேவையுள்ளது.

எம்மிடம் போதியளவு நீர் விநியோகம் செய்யும் பவுசர் வண்டிகள் இல்லாதிருப்பதுடன் கிராமங்களில் நீர் தாங்கிகள் வைத்து நீரை சேகரித்து வழங்குவதற்கு 2 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் லீற்றர் கொள்ளவு தாங்கிகள் கைவசமில்லை.

நீர் உள்ள பிரதேசங்களில் இருந்து நீரை கையிருப்பிலுள்ள பவுசர் வண்டிகளில் சேகரித்து வந்து எமது பிரதேச சபை வளாகத்திலுள்ள தாங்கிகளில் நிரப்பி கிராமங்களுக்கு விரைவாக வழங்குகின்றோம்.


அதற்கும் 5 ஆயிரம் தொடக்கம் 10 ஆயிரம் லீற்றர் வரையிலான பெரிய நீர்த்தாங்கிகள் தேவையாகவுள்ளன.

எனவே நீர்த்தாங்கிகளையும் பவுசர் வண்டிகளையும் அன்பளிப்புச் செய்ய விரும்பும் கருணை உள்ளங்கள் 021228 5761 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அல்லது கரைச்சி பிரதேச சபை அலுவலகத்துடன் நேரடியாக தொடர்பு கொண்டு வழங்கியுதவுமாறு அவர் தனது வேண்டு கோளில் தெரிவித்துள்ளார். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா சென்று கூட்டமைப்பு பொய் சொல்வதில் பயனில்லை

## அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இந்தியாவுக்கு விஜயம் செய்து இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக பொய்யான முறைப்பாடு களை செய்துள்ளமை தொடர்பில் அரசாங்கம் ஆச்சரியமடையவில்லை. காரணம் வரலாறு முழுவதும் கூட்ட மைப்பினர் இவ்வாறே செயற்பட்டு வந்துள்ளனர் என்று ஆளும் கட்சி யின் பிரதம கொறடாவும் அமைச் சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

எவ்வாறெனினும் முக்கியமான ஒரு விடயத்தில் இந்தியாவும் கூட்ட மைப்பும் முரண்பாடான நிலையை கொண்டுள்ளன. சர்வதேச விசாரணை கூடாது என்று இந்தியா கூறுகை யில், சர்வதேச விசாரணை வேண்டும் என்று கூட்டமைப்பு கூறியுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க செயற்படாமல் புலம்பெயர் மக்களின் தேவைக்கேற்ப செயற் பட்டு வருகின்றது. அவர்கள் உள் நாட்டு தத்துவத்தின் ஊடாக செயற் படாமல் சர்வதேச தத்துவத்தின் ஊடாக செயற்பட்டு வருகின்றனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையில் சட்டங்களை நிறை வேற்றுவது இலங்கை பாராளுமன் றம் என்பதனை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மறந்து விட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இந்திய விஜயம் மற்றும் இந்திய பிரதமருடனான சந்திப்பு என்பன தொடர்பில் கருத்து வெளியிடுகை யிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவுடன் கூட்டமைப்பு இணைந்து செயற்பட வேண்டும் என்பதே இந்தியாவின தும் விருப்பமாகும். எனினும் கூட்ட மைப்பு தெரிவுக்குழுக்கு இன்னும் வரவில்லை. தற்போது இந்தியா வுக்கு சென்று கூட்டமைப்பு இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக முறைப் பாடு செய்துள்ளது.

ஆனால் வடக்கு மாகாணம் தற் போது எந்தளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது என்பது அனை வருக்கும் தெரியும். எனினும் வடக்கு அடைந்து வரும் முன்னேற்றம் கூட்ட மைப்புக்கு தெரியாது. காரணம் கூட்ட மைப்பின் பிரதிநிதிகள் கொழும்பில் உள்ளனர். எது எவ்வாறு இருப்பினும் வடக்கில் ஏற்பட்டுள்ள முன்னேற்ற ங்கள் குறித்து இந்தியா அறிந்து வைத்துள்ளது.

இதேவேளை விரைவில் வடக்கு க்கான புகையிரதப் பாதை திறக் கப்படவுள்ளது. வடக்குக்கு புகையிரதம் செல்லப்போகின்றது. இந்த நிலை யில் புகையிரத பாதை திறப்பு விழா நடைபெறும் போது தண்டவாளத் தின் மீது ஏறி ஆர்ப்பாட்டம் செய்வதா அல்லது ஜனாதிபதியுடன் புகையிர தத்தில் யாழ்ப்பாணம் பயணிப் பதா என்பதை கூட்டமைப்பு தீர்மானிக்க வேண்டும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பா னது தமிழ் மக்களின் பிரச்சினை களை தீர்க்க செயற்ப்டாமல் புலம் பெயர் மக்களின் தேவைக்கு ஏற்ப செயற்பட்டு வருகின்றது. அவர்கள் உள்நாட்டு தத்துவத்தின் ஊடாக செயற்படவில்லை. மாறாக சர்வதேச தத்துவத்தின் ஊடாக செயற்பட்டு வரு கின்றனர்.

தமது மக்களின் பிரச்சினைக் கான தீர்வைப் பெறுவதற்காக கூட்ட மைப்பு வெளிநாடுகளுக்கு செல்ல வில்லை. மாறாக அரசாங்கத்துக்கு எதிரான பொய்யான முறைப்பாடு களை செய்யவே சர்வதேச நாடு களுக்கு செல்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சந்தேக நபருக்கு பிணை; விரக்தியில் கத்திக்குத்து

வழக்கொன்றில் பிணை பெற்று சென்றுகொண்டிருந்த சந்தேகநபர் மீது கொழும்பு போக்குவரத்து நீதவான் நீதிமன்றத்தின் முன்பாக வுள்ள வீதியில் வைத்து கத்தியால் குத்திவிட்டு தப்பியோடுவதற்கு முயன்ற ஒருவரை கைது செய்து ள்ளதாக வாழைத்தோட்ட பொலி ஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மூவரில் ஒருவர் பலியானதுடன் இருவர் கொழும்பு தேசிய வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டு ள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கொட்டாஞ்சேனை பிரதேச த்தில் வசிக்கும் கொழும்பு பெண்கள் பாடசாலையில் கல்விபயிலும் 17 வயதான பெண்ணை கடத்தி சென்று துஷ்பிரயோகத்துக்கு உட்ப டுத்தியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்ப ட்டுள்ளது.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்நத எடொன் நிரோஷன் (வயது 25) என்ற இளைஞன் கைது செய் யப்ப ட்டு கொழும்பு- இலக்கம் 3 நீதிம ன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

நீதிமன்றம், சந்தேகநபரை நேற்று திங்கட்கிழமை வரை யிலும் விளக்கமறியலில் வைக் குமாறு உத்தரவிட்டிருந்தது.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது அவருக்கு பிணை வழங்கப்பட்டது.

பிணை வழங்கப்பட்டதன் பின் னர் நீதிமன்ற வளாகத்து க்கு வெளியே சென்ற சந்தர்ப் பத்தில், பாதிக்கப்பட்ட பெண்ணின் தந்தை யான 51 வயதான முத்தையா செல வராஜ் என்ப வர், சந்தேக நபரின் தந்தை யான 61 வயதான ஜி.ஏ. ஜேசீ லன் என்பவ ரையும் சந்தேக நபரான எடொன் நிரோஷன் என்ப வரையும் அவருடைய சகோதரி யான தில்ஷாவையும் (வயது 23) கத்தியால் குத்தியுள்ளார்.


படுகாயமடைந்த மூவரும் கொழு ம்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், இளைஞனின் தந்தை பலியாகியு ள்ளார். சம்பவம் தொடர்பில் யுவதி யின் தந்தை யான முத்தையா செல் வராஜ் வாழைத்தோட்ட பொலிஸார னால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் அந்த யுவதியை முகப்புத்தகம் (பேஸ்புக்) ஊடாக நண் பராக்கி கொண்டதுடன் யுவதியை கடத்திச்சென்று நிர்வாணமாக படம்பிடித்துள்ளார்.

அந்த படத்தை முகப்புத்தக த்தில் தரவேற்றம் செய்யபோ வதாக தொலைபேசியூடாக அச்சுறு த்தியே யுவதியை கடத் திச்சென்று துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியு ள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்று பொலி ஸார் தெரிவித்தனர். (இ)

# விசாரணைகளுக்கான தகவல் வழங்குவதே சவாலாகவுள்ளது

## ஹரி ஆனந்தசங்கரி தெரிவிப்பு



ஐ.நா மனிதவுரிமை ஆணைக் குழுவின் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த சர்வதேச விசாரணைக்கான விப ரங்கள், தடயங்கள், தகவல்கள் மற்றும் சாட்சியங்கள் வழங்குவதே தற்போதுள்ள சவால் என கனேடிய லிபரல் கட்சியின் வேட்பாளராக தெரிவுவாகியுள்ள ஹரி ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

கனடாவின் ஸ்காபரோ ரூஜ் பார்க் (Scarborough Rouge Park ) தொகுதி லிபரல் கட்சியின் வேட்பாளர் தெரிவுக்கான போட்டி யில் பெரும்பான்மை வாக்குக ளைப் பெற்று ஹரி ஆனந்தசங்கரி வெற்றிபெற்றுள்ளார்.

கடந்த 5 வருடங்களாக பல நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி மேற்கொண்ட முனைப்பின் பயனாக இந்த சர்வதேச விசா ரணைக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ள தாக அவர் தெரிவித்தார்.

கனடாவில் உள்ள தமிழ் சட்டத் தரணிகள் உட்பட பலர் ஒன்று கூட்டி போர்க்குற்றங்களுக்கான சாட்சியங்கள், தடயங்கள் மற்றும் தகவல்களை வெளிக்கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஈடு பட்டுள்ளனர்.

ஓரிரு வாரங்களுக்குள் அவ ற்றை வெளிக்கொண்டு வர முடி யும் என தாம் நம்புவதாகவும் ஹரி ஆனந்தசங்கரி மேலும் தெரிவித் துள்ளார். (இ)

# கண்காட்சியும் விற்பனையும்

வவுனியா மாவட்ட கிராம அபி விருத்தி திணைக்களத்தின் ஏற் பாட்டில் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கண்காட்சியும் விற்பனையும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா உள்வட்ட வீதியில் அமைந்துள்ள கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பல நோக்கு பயிற்சி நிலையத்தில் மாவட்ட உத்தியோகத்தர் திருமதி தே.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு அர சாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திர பிரதம விருந்தினராகவும் மீன்பிடி போக்குவரத்து வர்த்தக வாணிப கிராமிய அபி விருத்தி அமைச்சின் செய லாளர் ஆர்.வரதீஸ்வரன், வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் ஜே.ஜே. பெலிசியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் வவு னியா மாவட்ட பிரதேச செயலாளர் கா.உதயராசா, வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் கா.பரந்தாமன், செட்டிகுள பிரதேச செயலாளர் நா.கமல தாசன் ஆகியோர் கௌரவ விருந்தி னர்களாகவும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2-250)

# குடு ஷாமர மீண்டும் கைது

(கொழும்பு)

போதைப்பொருளை வைத்திரு ந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நிலையில், தப்பியோ டிய தேவகே துசித்த ஷாமர என்ற ழைக்கப்படும் நிலான் கைது செய்ய ப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவி த்துள்ளனர்.

பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பயங்கரவாத விசாரணைப்பிரி வினரால் நேற்று திங்கட்கிழமை மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

500 கிராம்ஹெறோயின்போதைப பொருளை தம்வசம் வைத்திரு ந்தார் என்ற குற்றச்சா ட்டில் குறித்த நபர், தலங்கம, முத்தெட்டுகொட வீதியில் வைத்து ஜூன் மாதம் 26 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை கடுவலை நீதிம ன்றத்தில் ஜூன் .26 ஆம் திகதி ஆஜர்படுத்திய போது, அவரை தடு த்து வைக்குமாறு நீதவான் உத்தர விட்டார். அதனடிப்படையில் குறித்த சந்தேகநபர், மஹர சிறைச்சாலை யில் தடுத்து வைக்கப்பட்டார்.

சந்தேகநபர், சிறைச்சாலைக்குள ஜூன் மாதம் 28 ஆம் திகதி சுகயீன முற்றதால் அவர், ராகமை வைத் தியசாலையில் அன்றைய தினமே அனுமதிக்கப்பட்டார்.

அதன்பின்னர் வைத்தியசா லையிலுள்ள மலசலகூடத்திற்கு சிறைச்சாலை அதிகாரிகளினால் மறுநாள் 29 ஆம் திகதி இரவு 8.45 மணியளவில் அழைத்து சென்ற போது அவர், அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார். (இ)

# மகளை துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய தந்தைக்கு ஐந்து ஆண்டு கடூழிய சிறை

(கொழும்பு)

மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த தந்தைக்கு கல்முனை மேல் நீதிமன்றம் 5 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்ப ளித்துள்ளது.

திருக்கோயில் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பாலக்குடா எனும் பிரதே சத்தைச் சேர்ந்த 50 வயது தந்தை க்கே கல்முனை மேல்நீதிமன்ற நீதி பதி மா.இளஞ்செழியன் இத்தீர்ப்பை வழங்கினார்.

கூலி வேலைக்காக மனைவி சென்றவேளை குடிபோதையில் வந்த தந்தை தன்னை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக 14 வயது மகள் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்தே இவ்வழக்கு தொடரப்பட் டது. 2008 ஆம் ஆண்டு இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

சட்டமா அதிபரினால் கல்முனை மேல் நீதிமன்றத்தால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை அரச சட்ட வாதி நி.நாகரெட்ணம் நெறிப்படுத் தினார்.

பாதிக்கப்பட்ட சிறுமியும் அவரு க்கு ஆதரவாக வைத்திய கலாநி தியும் தந்தைக்கு எதிராக சாட்சிய மளித்தமையினால் வழக்கின் இடை நடுவில் குற்றத்தை எதிரி ஒப் புக் கொண்டார்.

வைத்திய கலாநிதியின் சாட்சி யத்தில் குறித்த சிறுமியின் கன்னித் தன்மை பாதிப்படையவில்லை எனவும் காயங்கள் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டமையி னாலும் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டமையினாலும் எதிரிக்கு 5 ஆண்டு கடூழிய சிறைத்தண்டனை யுடன் 25 ஆயிரம் ரூபா நட்ட ஈடும் ஐயாயிரம் ரூபா தண்டமும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். (இ)

# சூதாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் ஐவர் கைது

(கொழும்பு)

புளத்சிங்கள, விஹாரைக்கு அருகிலுள்ள வீடொன்றில் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்டதாக கூறப் படும் பெண்கள் ஐவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவி த்தனர்.

புளத்சிங்கள பகுதியைச் சேர்ந்த ஐவரே இவ்வாறு கைதுசெய்ய ப்பட்டுள்ளனர். இவர்களில் மேலும் மூவர் தப்பியோடியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.




பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை தொடர் ந்து மேற்படி பகுதியை சுற்றிவ ளைத்த பொலிஸார் இப்பெண் களை கைதுசெய்துள்ளனர். இவர்க ளுடன் சூதாட்டத்தில் ஈடுபட்ட மேலும் மூவர் இதன்போது தப்பியோ டியுள்ளனர்.



இந்நிலையில் தப்பியோடிய மூவரை கைதுசெய்வதற்கான விசா ரணைகள் முடக்கி விடப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் மதுகம நீத வான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட வுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலையலையெனத் திரண்ட அடியவர்கள் வெள்ளத்தின் மத்தியில் நல்லூர்க்கந்தனுக்கு நேற்று தீர்த்தோற்சவம்


# காந்தி படத்தை இயக்கிய அட்டன்பரோ காலமானார்



ஒஸ்கார் விருது பெற்று புகழ் பெற்ற பிரிட்டிஷ் நடிகரும், இயக்குநருமான ரிச்சர்ட் அட்டன்பரோ நேற்றுமுன்தினம் காலமானார். அவருக்கு வயது 90.

கடந்த சில ஆண்டுகளாகவே அவர் உடல் நலக்குறைவால் வைததியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்தார். சில ஆண்டுகளுக்கு மூன் மாடிப்படியில் தவறி விழுந்ததை அடுத்து, வீல் சேரில் இருந்தே இயங்கிக்கொண்டிருக்க வேண்டிய நிலையிலும் அவர் இருந்தார்.

சுமார் 60 வருடங்களாக திரைத்துறையில் நடிகர், இயக்குநர் என்ற பல்வேறு துறைகளில் பங்களிப்பைச் செய்தவர் அட்டன்பரோ.

இரண்டாம் உலகப்போர்க் கைதிகள் பற்றி சித்தரித்த "ப்ரைட்டன் ராக்", "தெ க்ரேட் எஸ்கேப்" போன்ற பல படங்களில் நடித்தவர் அட்டன்பரோ.

புகழ்பெற்ற ஹொலிவுட் இயக்குநர் ஸ்டீவன் ஸ்பீல்பர்க் தயாரித்த "ஜுராசிக் பார்க்" படத்திலும் அவர் நடித்திருந்தார்.

"காந்தி" தந்த புகழ்

ஆனால் அவர் 1980களில் ஆரம்பத்தில் இயக்கி வெளியிட்ட இந்தியத் தேசப்பிதாவாகக் கருதப்படும் மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாற்றுப் படமான "காந்தி" அவருக்குப் பெரும் புகழைப் பெற்றுத்தந்தது. இந்தப் படத்துக்காக அவருக்கு இரு ஒஸ்கார் விருது கள் கிடைத்தன.

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன், அட்டன்பரோவின் [illegible] ஒட்டி தனது டுவிட்டர் [illegible] வெளியிட்ட செய்தியில், "ப்ரைட்டன் ராக்" படத்தில் அவரது நடிப்பும், "காந்தி" படத்தை அவர் இயக்கிய விதத்தையும் பாராட்டி, அட்டன்பரோ திரைத்துறையின் மிகப் பெரும் நாயகர் என்று அஞ்சலி செலுத்தினார்.

"காந்தி" படத்தியில் காந்தியாக நடித்த பிரிட்டிஷ் நடிகர் பென் கிங்ஸ்லியும்," ஜுராஸிக் பார்க்" பட இயக்குநர் ஸ்டீவன் ஸ்பீல்பர்கும் அட்டன்பரோவின் [illegible] அஞ்சலி செலுத்தினர். (இ)

# பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்பை பதவியிலிருந்து நீக்க மாபெரும் பேரணி

## 60 ஆயிரம் பேர் பங்கேற்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்பை பதவியில் இருந்து நீக்கும் கோரிக்கையுடன் லாகூர் நகரில் இருந்து பல்லாயிரக்கணக்கான தொண்டர்களுடன் பேரணியாக சென்ற தெஹ்ரிக் இ இன்சாப் கட்சியின் தலைவரும், பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனுமான இம்ரான் கான் சுமார் 60 ஆயிரம் தொண்டர்களுடன் தற்போது தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள பாராளுமன்ற த்தை முற்றுகையிட்டு மறியல் போராட்டம் நடத்தி வருகிறார்.

இதேபோல், கராச்சி நகரில் இருந்து புறப்பட்ட தாஹிர் உல் காத்ரி தலைமையிலான பேரணியும் தலைநகர் இஸ்லாமாபாத்தை வந்தடைந்துள்ளதால் அங்கு பரபரப்பான சூழ்நிலை நிலவுகிறது. ஏராளமான இராணுவத்தினரும், பொலிசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தலில் முறைகேடுகளை செய்து ஆட்சியை பிடித்த பிரதமர் நவாஸ் ஷெரிப் பதவி விலக வேண்டும். பாராளுமன்றத்தை கலைத்து வட்டு மறுதேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட 14 அம்சங்களை முன்வைத்து தாஹிர் உல் காத்ரியும் போராடி வருகிறார்.

நவாஸ் ஷெரிப் பதவி விலகும் வரை அங்கிருந்து புறப்படமாட்டேன் என அறிவித்து தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறார்.

போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர இம்ரான்கானுடன் பேச நவாஸ் ஷெரிப் 5 பேர் கொண்ட குழுவை அமைத்தார். அவர்கள் நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படவில்லை.

எனவே, கட்சியின் மூத்த தலைவர் ஷா மெக்மூத் குரேஷி, இம்ரான்கான் உட்பட தெஹ்ரிக் இன்சாப் கட்சியை சேர்ந்த 34 எம்.பி.ககளும் பதவியை இராஜினாமா செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் எதற்குத் தகுதியானவன் என்ற கண்டு பிடிப்பதும் அதனைச் செய்து காட்ட வாய்ப்பினைத் தேடி அடைவதும் தான் உண்மையான மகிழ்ச்சி.

– ஜான் டூபி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கூட்டமைப்பிடம் மோடி கூறியது என்ன? முழுவதையும் அறிக்கைப்படுத்துங்கள்

இந்தியப் பிரதமர் மோடியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தித்தபோது கூட்டமைப்பிடம் அவர் கூறியது என்ன?, பிரதமர் மோடியிடம் கூட்டமைப்பு கூறியது யாது என்பன பற்றித் தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்டு.

ஏனெனில் பிரதமர் மோடியுடனான சந்திப்பு மிகவும் முக்கியமானது. அதேநேரம் அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளுக்கு இந்தியாவின் ஆட்சி மோடியின் கைகளில் என்பதும் தெரிந்த விடயம்.

எனவே எங்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் என்ற காலப்பகுதியில் இந்தியாவின் பிரதமராக இருக்கக்கூடிய மோடி; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கூறியவை என்ன? என்பதை முழுமையாக அறிக்கைப்படுத்தி அதனை வெளிப்படுத்துவதன் மூலம், தமிழ் மக்கள் அறியமுடிவதுடன் மோடியுடனான சந்திப்பில் கலந்து கொண்டவர்கள், சந்திப்பில் பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்களை எதிர்காலத்தில் திரிபுபடுத்திக் கூறுகின்ற துர்ப்பாக்கிய நிலைமைகளையும் தடுக்க முடியும்.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் நாடு திரும்பியதும் பிரதமர் மோடியுடனான சந்திப்பின் முழு விபரத்தையும் வெளிப்படுத்துவது கட்டாயம்.

கடந்த காலங்களில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் விடயங்களை வெளிப்படுத்தாமல் விட்ட தவறைத் தொடர்ந்தும் சம்பந்தர் ஐயா விடலாகாது.

மேலும் மாகாணசபைச் சட்டங்கள் இடம் கொடுக்குமாயின் பிரதமர் மோடியுடன் நடந்த சந்திப்பின் முழு விபரத்தையும் வடக்கு மாகாண சபையின் கூட்டத் தொடரில் தெரியப்படுத்துவது மிகவும் பொருத்துடையதாக இருக்கும்.

இனப்பிரச்சினை என்பது எந்த அரசியல் கட்சியினதும் பிரச்சினை அன்று. அது தமிழ் மக்களின் பிரச்சினை. தமிழ்த்தாயகத்திற்காகத் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த பல்லாயிரக் கணக்கானவர்களின் குடும்பங்கள், தங்கள் பிள்ளைகளின் தியாகம் எப்போது வெற்றிதரும் என்ற வேட்கையுடன் காத்திருக்கின்றனர்.

அவர்களின் தியாகம் வீண் போகக் கூடாது என்பதற்கான பிரார்த்தனையில் தங்களை அர்ப்பணித்திருக்கக் கூடிய தமிழ் மக்களுக்கு இனப்பிரச்சினை தொடர்பில் பேசப்படும் அத்தனை விடயங்களும் தெரியப்படுத்த வேண்டும்.

அந்த விடயங்ளைத் தெரிந்து கொள்கின்ற பூரண உரிமை தமிழ் மக்களுக்கு உண்டு. எந்த விடயத்தையேனும் மறைக்க வேண்டும் என நினைப்பதோ, அல்லது இரகசியம் பேண வேண்டும் என்று கருதுவதோ அர்த்தமற்றவை. எங்கள் விடயத்தில் இரகசியம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

எங்கள் இனத்தின் உயிரெடுப்பு பகிரங்கமாக நிறைவேற்றப்பட்டமை உலகறிந்த உண்மை. எனவே எங்கள் இனம் இனியும் ஓர் அழிவைச் சந்திக்காமல் இருக்க வேண்டும். அதற்கான ஒரேவழி தமிழ் மக்களை ஆளுகின்ற அதிகாரம் தமிழ் மக்களிடம் இருப்பதாகும்.

அதற்காக நாங்கள் உள்நாட்டில் அரசுடன் பேசலாம். அது வெற்றி தராவிட்டால் உலகிடம் முறையிடலாம். இந்த நாட்டின் எல்லைக்குள் பிரச்சினையை பேசித்தீர்ப்பது உத்தமமானது.

ஆனால் அதற்கான எத்தனையோ சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டும் அதிகாரவர்க்கம் தமிழர்களை ஏமாற்றிக் கொண்டே இருக்கிறது. அதிகாரத்தைத் தரவேண்டியவர் பின்னடிக்கும் போது அண்டை நாட்டிடம் முறையிடுவதில் எந்தத் தவறும் இல்லை. இந்த முறையீடு இலங்கையில் இன்னுமொரு போருக்குச் சந்தர்ப்பம் கொடுக்காமல் இருக்க வேண்டும் என்பதற்கானது.

ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தனிப்பட்ட விடயம் தவிர்ந்த; தமிழ் மக்களோடு சம்பந்தப்பட்ட அனைத்துச் சந்திப்புக்கள், திட்டமிடல்கள் குறித்து உடனுக்குடன் தமிழ் மக்களுக்குத் தகவல் கொடுக்க வேண்டும். இஃது கூட்டமைப்பின் மீதான நம்பகத்தன்மையையும் வலுப்படுத்தும்.

# சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஜயசூரியவுக்கு அச்சுறுத்தலில்லை

## நீதிமன்றில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி உபுல் ஜயசூரியவுக்கு அச்சுறுத்தல் இல்லை என்று நீதிமன்றத்தின் கவனத்திற்கு நேற்று திங்கட்கிழமை கொண்டுவரப்பட்டது.

அவருக்கு உயிர் அச்சுறுத்தல் இல்லை என்பது புலனாய்வு அறிக்கையின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் அவருடைய தனிப்பட்ட பாதுகாப்புக்கு பொலிஸ் அதிகாரிகள் இருவர் தேவையில்லை என்றும் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இவை தொடர்பில் சட்டம் மற்றும் சமாதானம் அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி, பொலிஸ் மா அதிபருக்கு தெரிவித்துள்ளதாக மேல் மாகாணத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் அநுர சேனா நாயக்க தெரிவித்தார்.

இந்த வழக்கு கோட்டை நீதவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டபோதே அவர், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொலிஸ் நடமாடும் வாகனத்தை அவருக்காக பயன்படுத்தல் உள்ளிட்ட தற்போது வழங்கப்படுகின்ற பாதுகாப்பு அவ்வாறே முன்னெடுக்கப்படும் என்றும், உபுல் ஜயசூரியவின் பாதுகாபபுக்கான முழுமையான பொறுப்பை தான் ஏற்றுகொள்வதாக பிரதி பொலிஸ் மா அதிபர் அநுர சேனாநாயக்க, நீதவான் திலின கமகேவிற்கு தெரிவித்தார்.

உபுல் ஜயசூரியவின் சார்பில் நீதிமனறத்தில் ஆஜரான சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க, கொழும்பிலுள்ள பாதாள உலக கோஷ்டி தலைவர்களுக்கு பொலிஸ் அதிகாரிகள் அறுவர் பாதுகாப்பு வழங்குகின்ற போது சட்டத்தரணிகள் சங்கத் தலைவருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்காமை இலங்கை பொலிஸை கண்டிக்கத்தக்கதாகும்.

கே.பி என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன் அல்லது பாதாள உலக கோஷ்டி தலைவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் போது, புலனாய்வு அறிக்கை கவனததில் கொள்ளப்பட்டதா? என்றும் சட்டத்தரணி வன்னிநாயக்க கேள்வியெழுப்பினார்.

முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை நடத்தி ஒக்டோபர் 20 ஆம் திகதி அறிக்கையிடுமாறும் நீதவான் பணித்தார். (இ)

## அமெரிக்கா சென்ற ஜனாதிபதி வியாழனன்று நாடு திரும்புவார்

(வாஷிங்டன்)

மருத்துவ சிகிச்சைக்காக கடந்த சனிக்கிழமை திடீரென அமெரிக்காவுக்கு புறப்பட்டுச் சென்ற ஜனாதிபதி மகிநத ராஜபக்ஷ எதிர்வரும் 28 ஆம் திகதி நாடு திரும்ப உள்ளதாக ஜனாதிபதி செயலக தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க மருத்துவர்கள் பரிந்துரைத்த மருந்துகளுக்கு மேலதிகமாக ஜனாதிபதியின் தனிப்பட்ட மருத்துவர் எலியந்த வைட் வழங்கிய மருந்துகள் காரணமாக ஏற்பட்ட உடல்நலகுறைவு குறித்து பரிசோதனை செய்வதற்காக ஜனாதிபதி அமெரிக்கா சென்றதாக அந்த தகவல்கள் குறிப்பிட்டன.

எதிர்வரும் 6 ஆம் 7 ஆம் திகதிகளில் ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபே இலங்கை விஜயம் மேற்கொள்ள உள்ளதுடன் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் சீன ஜனாதிபதி ஷிங் ஜிங் பிங் இலங்கைக்கு விஜயம் செய்கிறார்.

இவர்களின் விஜயங்கள் இலங்கைக்கு முக்கியமானது என்பதால், அதற்குதயாராகும் வகையில் ஜனாதிபதி துரிதமாக நாடு திரும்புவதாக கூறப்படுகிறது.

ஜப்பான் பிரதமர் மற்றும் சீன ஜனாதி பதியின் வருகையின் பின், எதிர்வரும் 25 ஆம் திகதி ஐக்கிய நாடுகள்சபையின் வருடாந்த பொதுச்சபைக கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ மீண்டும் நியூயோர்க் புறப்பட்டுச் செல்ல உள்ளார்.

எவ்வாறாயினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்களில் எந்த உண்மையுமில்லை என ஜனாதிபதியின் செயலகம் ஏற்கெனவே அறிவித்திருந்தது. (எ-11)

## திவ்விய ஜீவன சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கம் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்று புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய போசகராக க.சி. சதாசிவம்(ஆசிரியமணி), தலைவராக சமாதான நீதவான் க.சி.ஆறுமுகம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை உப தலைவராக என். எஸ்.சபாரத்தினம், திருமதி கமலா குண சிங்கமும், செயலாளராக வ.கைலேஸ்வரனும், உப செயலாளராக டி.இராசையாவும், பிரசுரச் செயலாளராக ஓய்வு பெற்ற வங்கியாளர் ப.விக்னேஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டுடன் செயற்குழு உறுப்பினர்களாக எம்.குலசிங்கம், எஸ்.இலங்க நாயகம், கே.சதாசிவமூர்த்தி, எம்.கந்தையா, ஓய்வு பெற்ற தபால் அதிபர் ஆர்.பி.சிவப் பிரகாசன், ஏ.நடராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ

## சந்நிதியான் மஹோற்சவத்தை முன்னிட்டு ஆன்மீக நிகழ்வுகள்

(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு செல்வச்சந் நிதி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள ஆன்மீக நிகழ்வுகள் தினமும் முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய இன்று செவ்வாய்க் கிழமை வடபிராந்திய சாயி சமித்தி அன்பர்கள் வழங்கும் பஜனை நிகழ்வும் நாளை புதன்கிழமை சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் வழங்கும் முருகனின் திருப்பெருவடிவம் எனும் தலைப்பிலான சொற்பொழிவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை இளைப்பாறிய ஆசிரியர் ஐ.சண்முகலிங்கம் வழங்கவுள்ள ஆராத இன்பம் அருள் வான் எனும் தலைப்பிலான சொற்பொழிவும் மறுநாள் வெள்ளிக்கிழமை ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் சி.நவரத்தினம் வழங்கவுள்ள நலம் தரும் நம்பிக்கை எனும் தலைப்பிலான சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (இ

## பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

கணனி தொழில்நுட்ப பயிற்சி நெறி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலைய கேட்போர் கூடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளர் எஸ். சிவஸ்ரீ கேட்டுக்கொண்டுள்ளார். (இ

## தலை துண்டித்து 6 பேர் படுகொலை

(பிரசிலியா)

பிரேசிலின் கஸ்கவெல் மாகாணத்தின் தெற்குப் பகுதி நகரமான பரானாவில் உள்ள சிறைச்சாலை ஒன்றில் நேற்று முன்தினம் கைதிகள் தங்களின் இருப்பிட வசதிகளை மேம்படுத்தித் தருமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் ஆயிரத்து 140 கைதிகள் உள்ள இந்த சிறையில், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கைதிகள் குழுவானது ஆறு கைதிகளுடன் இரண்டு காவலர்களையும் பணயக் கைதியாக பிடித்து வைத்துக்கொண்டது.

இதில் இரண்டு கைதிகளின் தலையைத் துண்டித்ததுடன் மீதி நால்வரையும் அந்தக் குழு கொலை செய்துள்ளது. (இ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

### உண்மை அளப்பதில்லை



- உலகில் யாரும் தாழ்ந்தவர்கள் இல்லை. கடவுளின் படைப்பில் ஒவ்வொன்றும் பெரிதுதான். அது இருக்கும் இடத் தைப் பொறுத்து தரம் நிர்ணயமாகிறது
- முயற்சியுடன் செயலில் ஈடுபடுவதே உயிர் வாழ்வதன் அறிகுறி.
- தனக்கு கிடைக்கும் பயனை அளந்து பார்ப்பவன் உண்மையான நண்பனாக இருக்க முடியாது.
- பகையுணர்வால் யாரிடமும் சேராமல் தனித்து வாழ்பவன் அறிவிருந்தும் முட்டாள் தான்.
- தன்னைத் தானே புகழ்வதும், பிறர் மீது குற்றம் சுமத்துவதும் சிறுமதியாளர்களின் செயல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு சென் ஜுட் வி.கழகத்தின் மென்பந்தாட்ட சுற்றுப் போட்டி

## முள்ளியவளை வளர்மதி சம்பியன்

**முல்லைத்தீவு சென் ஜுட் விளையாட்டுக் கழகத்தின் முல்லைத்தீவு மாவட்டத்துக்கிடையிலான மென்பந்தாட்ட கிரிக்கெட் போட்டியில் கள்ளப்பாடு உதயம் அணியை வீழ்த்தி முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.**

முல்லைத்தீவு சென் ஜுட் விளையாட்டுக்கழகம் முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களிடையே நடத்திய பத்துப் பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்துச் சுற்றுப் போட்டியில் 18 அணிகள் பங்கு கொண்டன.

இவ்வணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் ஒரு பிரிவிலிருந்து இறுதிப்போட்டிக்கு முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக்கழக அணியும் மறுபிரிவிலிருந்து கள்ளப்பாடு உதயம் அணி இறுதிப் போட்டிக்கு உட்கொண்டு வரப்பட்ட நிலையில் இறுதிப் போட்டியானது கடந்த வியாழன் முல்லைத்தீவு முத்தவெளி விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்டது.

இறுதிப் போட்டியானது 12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டதாக நடத்தப்பட்டது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வளர்மதி அணி வெற்றி கொண்ட நிலையில் அணித்தலைவர் வ.கவிராஜன் முதலில் களத்தடுப்பில் ஈடுபடுவதற்கு தீர்மானித்தார்.

இந்நிலையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கள்ளப்பாடு உதயம் அணியினர் 9 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 56 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டனர்.

உதயம் அணி சார்பாக அதிகபட்சமாக சங்கீதன் 16 ஓட்டங்களை அணிக்காக பெற்றுக்கொடுத்தார். ஏனைய வீரர்கள் அனைவரும் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் வளர்மதி அணி சார்பாக ஆரணியன் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் அணித்தலைவர் கவிராஜன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 2 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 2 இலக்குக்களையும் வேணுதாஸ், சுஜிபவன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 57 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு துடுப்பெடுத்தாடிய வளர்மதி அணியினர் 3 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை எட்டி சம்பியனாகினர்.

துடுப்பாட்டத்தில் வளர்மதி அணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்டக்காரர்களாக களமிறங்கிய விஜயச்சந்திரன் வேணுதாஸ் ஜோடி சிறந்த இணைப்பாட்டத்தினை வழங்கினர். இதில் விஜயச்சந்திரன் 18 ஓட்டங்களையும் வேணுதாஸ் 9 ஓட்டங்களையும் பெற்றனர். அத்துடன் ஆரணியன் 10 ஓட்டங்களையும் கவிராஜன் ஆட்டமிழக்காது 12 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்துவீச்சில் கள்ளப்பாடு உதயம் அணி சார்பாக நவராஜ், ரவீந்திரன், அர்ஜுன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளை வீழ்த்தினர்.

இறுதியில் கள்ளப்பாடு உதயம் அணியினை முள்ளியவளை வளர மதி அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

போட்டியின் ஆட்ட நாயகனாகவும் தொடரின் ஆட்ட நாயகனாகவும் வளர்மதி அணியின் ஆரணியனும் தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக வளர்மதி அணியின் கவிராஜனும் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரனாக அதிக போட்டிகளில் கலந்துகொண்டு சிறப்பாக ஆடிய உதயம் அணியின் நவராஜும் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (க)

## பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் புதிய நிர்வாகம் தெரிவு

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் நடுவர்சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் அண்மையில் தேவரையாளி இந்துகல்லூரியில் இடம் பெற்றது. அதன் அடிப்படையில் 2014-2015 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக பா.முகுந்தனும், செயலாளராக செ.சுபேந்திராவும், பொருளாளராக வ.மனோறாஜும், உபதலைவராக மு.நவநேசனும், உபசெயலாளராக ம.சதீஷ்கரனும் நிர்வாகசபை உறுப்பினர்களாக ச.கருணாநந்தன், இ.மெய்யழகன், ரி.ரஜிகரன், ரி.லஷ்மன், பூ.கஜேநதிரன், க.ஜெயப்பிரதாபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி அராலி ஜேம்ஸ் வெற்றி



வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வடமாகாண பின்தங்கிய பாடசாலைகளின் மாணவர்களின் விளையாட்டுத்துறைக்கு ஊக்கமளிக்கும் வகையில் நடத்திய காற்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் போட்டியொன்றில் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

அணிக்கு 7 பேர் கொண்ட இந்தக் காற்பந்தாட்டச் சுற்றுப் போட்டி, உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இப் போட்டியில், அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழகமும் புன்னாலைக்கட்டுவன் ஈவினை கலைமகள் விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில், அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி 10:2 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

ஏனைய போட்டி முடிவுகள் வடமராட்சி கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் உரும்பிராய் சென்மைக்கல் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில், யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

அராலி அண்ணா விளையாட்டுக் கழகமும் மாதகல் சென்.தோமஸ் யுத் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில், அண்ணா விளையாட்டுக் கழகம் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகமும் அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில், விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க-23)

## கனெக்டிகட் ஓபன் டெனிஸ் சம்பியனாக குவித்தோவா




அமெரிக்காவில் நடந்த கனெக்டிகட் ஓபன் டெனிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் செக் குடியரசின் பெத்ரா குவித்தோவா சம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிப் போட்டியில் மெக்டலீனா ரிபாரிகோவாவுடன் (ஸ்லோவகியா) நேற்றுமுன்தினம் மோதிய குவித்தோவா 6:4, 6:2 என்ற நேர் செட்களில் வென்று கோப்பையை கைப்பற்றினார்.

இந்த தொடரில் அவர் ஒரு செட்டை கூட இழக்காதது குறிப்பிடத்தக்கது.

2014 சீசனில் 2 ஆவது சம்பியன் பட்டம் வென்றுள்ள குவித்தோவாவுக்கு, டெனிஸ் வாழ்க்கையில் இது 13 ஆவது பட்டமாகும். (க)

## முதலிடத்தில் அவுஸ்திரேலியாவின் ரிச்சியர்டோ



இந்த ஆண்டுக்கான பார்முலா 1 கார்ப்பந்தயம் 19 சுற்றுகளாக நடக்கிறது. இதன் 12 ஆவது சுற்றான பெல்ஜியம் கிராண்ட்பிரி அங்குள்ள ஸ்பா ஓடுதளத்தில் நேற்று நடந்தது. 22 வீரர்கள் கலந்து கொண்ட இந்த போட்டியில் 308 கிலோ மீற்றர் கொண்ட பந்தய தூரத்தை அவுஸ்திரேலியாவின் டேனியல் ரிச்சியர்டோ (ரெட்புல் அணி) 1 மணி 24 நிமிடம் 36.556 விநாடிகளில் கடந்து முதலிடத்தை பிடித்தார்.

இந்த சீசனில் அவரது 3 ஆவது வெற்றி இதுவாகும். முதல்வரிசையில் இருந்து புறப்பட்ட ஜெர்மனியின் நிகோ ராஸ்பர்க் (மெர்சிடஸ் அணி) அவரை வி. 3.383 வினாடி பின்தங்கி 2 ஆவது இடத்தை பிடித்தார். முன்னாள் சம்பியன் லீவிஸ் ஹாமில் டனின் (இங்கிலாந்து) கார் டயர் பஞ்சரானதால் அவர் பாதியிலேயே விலக நேரிட்டது.

போர்ஸ் இந்தியா அணி வீரர்கள் செர்ஜியோ பெரேஸ், ஹல்கென்பர்க் முறையே 8 மற்றும் 10 ஆவது இடங்களை பெற்றனர். 12 சுற்று முடிவில் சம்பியன்ஷிப் பட்டத்திற்கான போட்டியில் ராஸ்பர்க் 220 புள்ளிகளுடன் முதலிடத்திலும், ஹாமில்டன் 191 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்திலும், ரிச்சியர்டோ 156 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலும் உள்ளனர். (க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்துக்குட்டியான சிம்பாப்வேயை துவம்சம் செய்தது அவுஸ்ரேலியா

மக்ஸ்வெல், மிட்சல் மார்ஷின் அதிரடி அரைச்சதங்கள் கைகொடுக்க கத்துக்குட்டியான சிம்பாப்வே அணியை அவுஸ்திரேலிய அணி 198 ஓட்டங்களால் இலகுவாக வெற்றி கொண்டது.

சிம்பாப்வே, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலிய அணிகள் மோதும் மும்முனைத் தொடர் சிம்பாப்வேயில் நடைபெறுகிறது.

இதன் ஆரம்பப் போட்டியில் சிம்பாப்வே - அவுஸ்திரேலிய அணிகள் ஹராரே விளையாட்டுக் கழக






மைதானத்தில் நேற்று பலப்பரீட்சை நடத்தின.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி மக்ஸ்வெல் (93), மிட்சல் மார்ஷ் (89), ஆரோன் பின்ஞ் (67) ஆகியோரின் அபாரமான ஆட்டத்தினால் 50 ஓவர்களின் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 350 ஓட்டங்களை குவித் தது.


351 ஓட்டங்கள் என்ற கடின வெற்றியிலக்கை நோக்கி தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த சிம்பாப்வே அணி, அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சுக்கு முகம்கொடுக்க முடியாமல் 39.3 ஓவர்கள் வரையே தாக்குப்பிடித்து 152 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் சிம்பாப்வே அணி சார்பில் மசகட்சா 70 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

அவுஸ்திரேலிய அணியின் பந்து வீச்சில் ஸ்ரீபன் ஸ்மித் 3, ஸ்ரார்க், லயன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக சகலதுறை பெறுபேற்றை வெளிப்படுத்திய அவுஸ்திரேலிய அணியின் மிட்சல் மார்ஷ் தெரிவானார்.

இத்தொடரின் 2-வது போட்டி நாளை தென்னாபிரிக்க - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் இதே மைதானத்தில் நடக்கிறது. (க)



## கஞ்சாவுடன்...

வந்த இவர்கள், மதுபானம் அருந்தி விட்டு கடற்கரையில் நின்று தங்களுக்குள் சண்டையிட்டுள்ளனர்.

அங்கு சென்ற ஊர்காவற்றுறைப் பொலிஸார், அவர்களின் வாகனத்தைச் சோதனை செய்த போது, வாகனத்திற்குள் கஞ்சா இருந்தமையை கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து, 24, 37, 27, 28 வயதுடைய நால்வர் என அறுவர் கைது செய்யப்பட்டிருந்தனர். அத்துடன் அவர்களிடம் இருந்து 25 கிராம் கஞ்சாவும் மீட்கப்பட்டிருந்தது. (எ-11)

## இலங்கை...

குறைக்கப்படவில்லை.

இன்றும் வன் கொடுமைகள், சித்திரவதைகள், கடத்தல்கள், அச்சுறுத்தல்கள் தொடரந்த வண்ணமே இருக்கின்றன.

இதன்மூலம் இலங்கை அரசு தமிழ மக்களுக்கு அரசியல் தீர்வொன்றை வழங்க விரும்ப வில்லை என்பது தெளிவாகிறது.

எனவே இலங்கைத் தமிழர்களது பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு இந்திய அரசு உதவ வேண்டும் என்றார். (எ-11)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா நடராஜா

புத்தூர் வாதரவத்தையை பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி திருநெல்வேலி கிழக்கு திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா நடராஜா 25.08.2014 திங்கட்கிழமை நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் தங்கம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும் வேலுப்பிள்ளை இளையபிள்ளை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற நடராசாவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற பொன்னையா, காலஞ்சென்ற கந்தையா மற்றும் பூரணம் இராசதுரை, சோமசுந்தரம் ஆகியோரின் மூத்த சகோதரியும் பத்மாவதி, ஜெயரட்ணராஜா (யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கராசா, பிரேமலதா (அதிபர் யாழ். கோப்பாய் றோ.க.த.க பாடசாலை) ஆகியோரின் மாமியாரும், றாகினி (ஜேர்மனி), காலஞ்சென்ற தாகினி (பவா), பத்மபவன் (ராசா - இத்தாலி), பானுஜா (யா/இந்து மகளிர் கல்லூரி), சரன்ஜா (யா/இந்து மகளிர் கல்லூரி), சஞ்ஜயன் (யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 26.08.2014 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 1.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.

(7498)

தகவல் :
ந.ஜெயரெட்ணராஜா
(மகன்)

# இந்தியா - இங்கிலாந்து முதலாவது ஒருநாள் போட்டி

## மழையால் கைவிடப்பட்டது


பிரிஸ்டலில் நடைபெறுவதாக இருந்த முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி மழையால் கைவிடப்பட்டது.

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வரும் இந்திய கிரிக்கெட் அணி டெஸ்ட் தொடரில் படுதோல்வி அடைந்தது.

லோர்ட்ஸ் டெஸ்ட்டில் வரலாற்று வெற்றியை பெற்ற இந்திய அணி, அதன் பிறகு தொடர்ந்து மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் படுமோசமாக தோற்று 1:3 என்ற கணக்கில் தொடரை இழந்தது.

இதையடுத்து இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையே முதல் ஒருநாள் போட்டி பிரிஸ்டலில் நேற்று நடைபெறுவதாக இருந்தது.


ஆனால், நேற்றுமுன்தினம் இரவு முதலே தொடர்ந்து மழை பெய்ததால



ஆடுகளம் ஈரமாகி போட்டி தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. பிற்பகல் ஓவர்கள் குறைக்கப்பட்டு ஆட்டம் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், மீண்டும் மழை பெய்ததால் ஒரு பந்துகூட வீசப் பட்டாமல் ஆட்டம் கைவிடப்பட்டது. இரண்டாவது போட்டி நாளை 27-ம்திகதி கார்டிப் மைதானத்தில் நடைபெறுகிறது. (க)

## மின்னல் வேக வீரர் போல்ட் புதிய உலக சாதனை




உலகின் அதிவேக ஓட்ட வீரரான உசேன் போல்ட் புதிய அரங்கில் வேகமாக ஓடி புதிய உலக சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

நமபியா வீரர் பிராங்கி பிரெட்ஸ் 1996 ஆம் ஆண்டு 10.05 செக்கன்களில் 100 மீட்டர் தூரத்தை ஓடி நிலை நாட்டிய சாதனையை உசேன் போல்ட் 9.58 செக்கன்களில் ஓடி முறியடித்துள்ளார்.

போலாந்தில் உள்ள வோர்ஸ்வவ் தேசிய கால்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்ற ஓட்டப் பந்தயத்திலே இந்த சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

உபாதைகளில் இருந்த மீண்ட பின்னர் உசேன் போல்ட் பங்கேற்ற இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளார்.

இனி தனக்கு உபாதை வராது என நம்புவதாகவும், உபாதை காரணமாக தான் பட்ட கஷ்டங்கள் போதும் எனவும் உசேன் போல்ட் கூறியுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீறி விட்டார்...

பதவிப் பிரமாண நிகழ்வுகளின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை சந்திப்பதற்கு முன்னதாக அரசாங்கப் பிரதிநிதிகளை சந்திப்பதாக பிரதமர் மோடி உறுதியளித்திருந்தார்.

எனினும், இந்த வாக்குறுதி மீறப்பட்டுள்ளது.

அரசாங்கப் பிரதிநிதிகளை சந்திப்பதாக வாக்குறுதி அளித்த பிரதமர் மோடி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களை சந்தித்தமை அனுமதிக்கக் கூடியதல்ல என இலங்கை கூறியுள்ளது.

எதிர்காலத்தில் இந்த நடவடிக்கைக்கு இந்திய வெளிவிவகார அமைச்சின் ஊடாக இலங்கை வெளிவிவகார அமைச்சு எதிர்ப்பை வெள்ளியிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை அரசாங்கத்தின் அனுமதியின்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இந்திய பிரதமர் சந்திப்பு நடத்த மாட்டார் என இந்திய ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணிய சுவாமி இலங்கை ஊடகங்களுக்கு நேர்காணல் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுப்பிரமணிய சுவாமியின் இந்த அறிவிப்பை விடுத்து 24 மணித்தியாலத்திற்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இந்தியாவிற்கான விஜயத்தை ஆரம்பித்திருந்தனர். (எ-11)

# வங்கிக் கணக்கை...

காட்டவில்லை.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தன்னுடைய சொத்துக்களை வெளியிடவில்லை, தேசிய அபிவிருத்தி வங்கியிலுள்ள அவருடைய மூன்று கணக்குகளும் அதில் உள்ளடங்கும் என்று இலஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# மீண்டும்...

ப்படும் ஒருவர் இரண்டு தவணைகளுக்கு மேல் ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியாது என்பதே இலங்கை அரசியலமைப்பின் ஏற்பாடாக இருந்தது.

எனினும், இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்துக்கட்டுவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த மகிந்த ராஜபக்ஷ, 2010-ம் ஆண்டில் மீண்டும் வெற்றிபெற்ற பின்னர், ஜனாதிபதி ஒருவர் எத்தனை தடவை வேண்டுமானாலும் ஆட்சியில் இருக்கலாம் என்பதற்கு வசதியாக புதிய சட்டத்திருத்தத்தைக் கொண்டுவந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிவிட்டார்.

ஆனால், அந்த புதிய திருத்தம் மகிந்த ராஜபக்ஷவுக்கு பொருந்தாது என்று, முதல் தவணையின்போது அவரை ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்துவைத்த முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என். சில்வா கூறுகின்றார்.

அரசியலமைப்பின் பிரிவு 31 (2) இன்படி, மக்களால் 2 தடவைகள் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட எந்தவொரு நபரும், அதன் பின்னர் அதே பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட தகுதி அற்றவர் என்று கூறப்பட்டு ள்ளது. அப்படியென்றால் அந்த நபர் தேர்ந்தெடுக்கப்பட்ட தினத்தன்றே அந்த தகுதியீனமும் உருவாகிவிடுகின்றது என்றார் முன்னாள் தலைமை நீதியரசர்.

மகிந்த ராஜபக்ஷ இரண்டாவது தவணைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 2010-ம் ஆண்டு ஜனவரி 27-ம் திகதியன்றே, அவர் இன்னொரு தடவை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியற்றவர் நிலையை அடைந்துவிட்டதாகவும் சரத் என்.சில்வா வாதிட்டார்.

18-ம் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம், மூன்றாவது தடவையும் தன்னால் ஜனாதிபதியாக வரமுடியும் என்று மகிந்த ராஜபக்ஷ எதிர்பார்க்கிறார். ஆனால் இந்தத் திருத்தத்தின் மூலம், அவருக்கு ஏற்பட்ட அந்த தகுதியீனம் மாறப்போவதில்லை என்றார் முன்னாள் நீதியரசர்.

குறித்த அரசியலமைப்புத் திருத்தம் மகிந்த ராஜபக்ஷவுக்குப் பின்னர் பதவியேற்கவரும் ஜனாதிபதிகளுக்கே பொருந்தும் என்றும் என்றும் அவர் வாதிட்டார்.

மகிந்த ராஜபக்ஷவின் 6 ஆண்டு கால பதவிக்காலம் முடியும் 2016-ம் ஆண்டு நவம்பர் 19-ம் திகதிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் சரத் சில்வா விளக்கமளித்தார்.

இதேவேளை, முன்னாள் தலைமை நீதியர்சர் சரத் என். சில்வா வெளியிட்டுள்ள கருத்துக்களை வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நிராகரித்துள்ளார்.

ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியாக பதவி வகிப்பதில் இருந்த தடை, அரசியலமைப்பின் 18-ம் திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்டுவிட்டதாகவும் சட்டத்துறை பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் உள்ளூர் பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார். (எ-11)

# இலங்கை...

கடற்பரப்பில் ஆண்டுக்கு 120 நாட்களுக்கு மீன்பிடிப்பதற்கு பதிலாக 90 நாட்களாக குறைத்துக் கொள்கிறோம் எனவும் தமிழக மீனவர்கள் கோரிக்கை வைத்தனர். ஆனால், இதை ஏற்க இலங்கை பிரதிநிதிகள் மறுத்துவிட்டனர். மேலும், தமிழக மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை அழித்து வருவதாக அவர்கள் குற்றம்சாட்டினர்.

இந்நிலையில், இலங்கை கடற்தொழில் அமைச்சக பேச்சாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்தியா, இலங்கை மீனவர் பிரச்சினைகளுக்கு தீர்வுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்த, இரு நாட்டு மீன்பிடி பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி தீர்மானமொன்று பெறுவதற்கு முன்னதாக, இருநாட்டு அதிகாரிகள் நிலையிலான பேச்சுவார்த்தையை நடத்த தீர்மானித்துள்ளோம். இந்தப் பேச்சுவார்த்தை டெல்லியில் ஆகஸ்ட் 29-ம் திகதி நடைபெறும். இதில் இந்தியா-இலங்கை அதிகாரிகள் கலந்துகொள்வர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்னர், இலங்கையில் இருந்து தமிழக மீனவர்களின் 62 விசைப்படகுகளும் விடுவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-11)

# சொந்த ஊரில்...

யின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வுகளை ஒழுங்கு செய்வதற்காக பிரதமர் டி.எம். ஜயரட்ன தலைமையிலான 12 பேர் அடங்கிய பிரதிநிதிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் சமால் ராஜபக்ஷ, அமைச்சர்களான பந்துல குணவர்த்தன, ஜோன் செனவிரட்ன, ஹெகலிய ரம்புக்வெல்ல, டி.பி.ஏக்கநாயக்க மற்றும் மகிந்த அமரவீர உள்ளிட்டவர்கள் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

30 ஆயிரம் பேரின் பங்களிப்புடன் சுதந்திர தின நிகழ்வுகளை நடத்த ஜனாதிபதி உத்தேசித்துள்ளார். (எ-11)

# முதலமைச்ச...

சேனாதிராசா, பொன்.செல்வராசா ஆகியோர் இலங்கை திரும்பினர் என்றும் தெரிவித்தார்.

தமிழகத்தில் ஆளும் அ.தி.மு.க. தலைவர்கள் மற்றும் ஏனைய தலைவர்களைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவித்த அவரிடம் தமிழக முதல்வரைச் சந்திப்பீர்களா என்று கேட்டதற்கு, தமிழக முதல்வரைச் சந்திப்பதற்கு நாம் முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம். சந்தர்ப்பம் அமைந்தால் கட்டாயம் சந்திப்போம். அது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றார்.

ஏற்கெனவே புதுடில்லியிலிருந்து கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தமிழகம் சென்றடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)


## விற்பனைக்கு

நிலாவரையில் தொடராக உள்ள சகல வசதியுடைய மூன்று கடைகள் உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-0771834908

(7494)

## 100 வீத உத்தரவாதத்துடன் பிரான்ஸ் பறக்கலாம்

எதுவித தயக்கமும் இன்றி ஒரு மாதத்தில் பறக்கலாம்

100% சட்ட ரீதியாகச் செல்லலாம்

3 பேருக்கு மட்டுமே இவ்வாய்ப்பு

(நிபந்தனைகள் எதுவுமில்லை)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 0212219016, 0215689090



(7497)

## காணவில்லை



கந்தசாமி நாகரட்ணம் (பாட்டா அண்ணை)

புளியம்பொக்கணை சந்தியையும் தற்போது நவாலிவடக்கையும் வசிப்பிடமாகக் கொண்ட இவர் கடந்த சில காலமாக நோய்வாய்ப்பட்டிருந்தவர். 23.08.2014 முதல் இவரைக் காணவில்லை. தகவல் தெரிந்தவர்கள் பின்வரும் இலக்கத்துக்கு தெரியப்படுத்துமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தொ.பே.இல:-0773379322 தகவல்:-ஜீசான் (பேரன்)

## PATRICIAN INSTITUTES

பற்றீசியன் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

புதிய பிரிவுகள்:- ஆரம்பம் 03.09.2014

I.Computer course

A.Information & communication technology (ICT) — Duration 4 months
(O/L மாணவர்களின் நலன் கருதி ஆரம்பிக்கப்படுகின்றன)

B.Advanced in computer programming — Duration 8 months

C.Diploma in Microsoft office — Duration 4 months

D.Diploma in Desktop Publishing — Duration 4 months

E.Diploma in video Editing — Duration 4 months

F.Diploma in typeSetting — Duration 6 months

G.Diploma in Computerized Accounting — Duration 4 months

H.Diploma in Software Engineering — Duration 4 months

I.Diploma in Micro Media — Duration 6 months

J.Diploma in Web Multimedia — Duration 4 months

K.Professional Diploma in Graphic Design — Duration 4 months

L.Computer Hardware Technology — Duration 4 months

M.Internet & Email — Duration 3 months

N.General Information Technology (GIT) — Duration 4 months

II.Short Hand Typing (English) — Duration 6 months
சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்)
கணனி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்

III.Short Hand Typing (Tamil) — Duration 6 months
சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்)
கணனி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்

IV.General motor Mechanism — Duration 6 months
(Petrol & Diseal வாகனங்கள்
மோட்டார் வாகனம் திருத்துதல்)

V.Gentral Electrician (Wiring & Re-Winding) — Duration 6 months
ஜெனரல் எலக்ரிஸன் மின்சார இணைப்பு,
மோட்டார் றிவைண்டிங்)

VI.Lathe machine Operation (Milling Machine, — Duration 6months
Shaping Mechine என்பன கற்றுக் கொடுக்கப்படும்)
(கடைச்சல் இயந்திரப் பயிற்சி)
(On the Job training வழங்குதல்)

VII.Carpentery (with use of Machinery) — Duration 6 months
மரவேலை (on the Job training வழங்குதல்)

VIII.Refrigeration and Air Conditioning — Duration 6 months
குளிர்சாதனப் பெட்டி திருத்துதல்

IX.Motor cycle Mechanism — Duration 6 months

X.Arc Welding, Gas Welding — Duration 6 months

குறிப்பு:- 1. பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்.
2. பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-8286)

மேலதிக விவரங்களுக்கு:-

Registrar, Patrician Institutes
61, (59), St.Patrick's Road, Jaffna,
T:P:-021 222 6148, Fax:-021 222 6148
Email:-patricianjaffna@yahoo.com


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org